உதயம் 11 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2011

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டுச் சந்தா:** ரூ. 75 **தனி பிரதி:** ரூ. 20

காசோலை/மணியார்டர் 'ரமண கேந்திரா டிரஸ்ட்' என்ற பெயரில் எடுத்து 20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், ஏப்ரல் 2011


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஸ்ரீ ராமகிருஷ்ண மொழியும்! ஸ்ரீ ரமண வழியும்!! | பிர. கிரிதர ஜெகதீஷ் | 17 |
| 3 | நான் யார் தெரியுமா? | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 25 |
| 4 | கருணைக் கடவுள் கடைக்கண் வேண்டும்! | ஸ்வாமி இராமதீர்த்தர் | 35 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | | 36 |
| 5 | ரிபு கீதை | தியாகராஜன் | 37 |
| 7 | சுவர்மறை சோலை | ஜா. ஜயராமன் | 42 |
| 6 | சிவானந்த லஹரி | கௌதமன் | 45 |
| 7 | அருணை விஜய விழா | ஆகுரா | 50 |
| 8 | அற்றை நாள் அன்பர்கள் | | 54 |
| 9 | கருணையால் என்னை ஆண்டவன் | சரோஜா கிருஷ்ணன் | 56 |
| 10 | ரமணானுபவம் | நரசிம்மய்யர் | 67 |
| 11 | செய்திகள் | | 75 |


**முன் அட்டை: ஸ்ரீ ரமணாச்ரமத்தில் யோகாம்பிகை அம்மனின் அலங்காரத் திருவுருவம்**

# ஆசிரியர் உரை

## பலகையைச் சார்ந்த பாறை

காலம், இடம் என்ற இரு எல்லைகட்கு இடையே நாம் பிடிபட்டுள்ளோம். கால எல்லைக்கும், இட எல்லைக்கும் இடையே அகப்பட்ட இவ்வுலக வாழ்வில் நாம் இருக்கும் வரை, நாம் எல்லைகள் கடந்த வெறுவெளியை அனுபவிக்க முடியாது. இந்தப் பிரபஞ்ச எல்லையை, அர்த்தப் பிரபஞ்ச மற்றும் சப்தப் பிரபஞ்ச எல்லையைக் கடந்தால் மட்டுமே நாம் எல்லையற்ற வெறு வெளியில் இருக்கமுடியும். நாமாக நமது முயற்சியால் மட்டுமே இவ்வெல்லையைக் கடப்பது என்பது இயலாத செயல். யார் அந்த எல்லையைக் கடந்து நிற்கிறார்களோ அவருடன் சார்ந்தால் நாமும் எல்லை கடந்து வெறு வெளியின் பேரின்பத்தில் திளைப்போம். ஒரு சிறிய கல்லைக் கூட ஒரு குளத்தில் போட்டால் அது அமிழ்ந்து விடுகிறது. அப்படி இருக்கும்போது ஒரு டன் எடையுள்ள பாறையை அதில் மூழ்காமல் மிதக்கச் செய்ய முடியுமா? முடியாது என்று தான் தோன்றும். ஆனால் முடியும். தண்ணீரின் மேல் மிதக்கின்ற ஒரு பெரிய பலகையின் மீது அந்தப் பாறையை வைத்தால் அது தண்ணீரில் மிதக்கும். அறியாதவர்கள் 'என்ன சிறிய கல்லே அமிழும் போது பெரிய பாறை மிதக்கின்றதே!' என்று வியக்கலாம். அந்தப் பாறை தானாகவே மிதக்கவில்லை

*அது மிதக்கும் இயல்புடைய பலகையைச் சார்ந்து இருப்பதால் மிதக்கிறது. அதுபோல கால, இட எல்லைகட்குள் சிக்கிய நம்மால் அந்த எல்லையைத் தாண்டி வெறுவெளி செல்லுதல் இயலாது. அந்த எல்லையைக்கடந்து நிற்கும் பகவானைப் பற்றினோமாயின் அவரது சார்பினால், அருளினால் காலத்தையும், இடத்தையும் வென்று வெறு வெளியில் பேரின்பம் அடைந்திருப்போம். பகவான் தனது ஆத்ம வித்யா கீர்தனத்தில், ''அருளும் வேணுமே'' என்று வெறு வெளியை அடைய, கால - இடத்தைக் கடக்க வைக்கும் துணையாக இறைவன் அருளைக் குறிப்பிடுகிறார்.*

*கந்தர் அலங்காரத்தில் அருணகிரி நாதர்,*

***நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்***<br>
***கோலக் குறத்தியுடன் வருவான் குருநாதன் சொன்ன***<br>
***சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார் சிவ யோகிகளே***<br>
***காலத்தை வென்றிருப்பார், மரிப்பார் வெறும் கர்மிகளே. (26)***

*என்று அறுதியிடுகிறார்.*

*பகவான் சொன்ன ஆத்ம விசாரமாம் நெறியை, ஆத்ம சமர்ப்பணம் செய்யும் மனத்துடன் பயில்பவர்கள் காலத்தை வென்று வெறுவெளியில் வீற்றிருப்பார்கள். இந்த ஆத்ம விசாரத்தை விட்டுவிட்டு, வெறும் பூசை செய்பவர்கள் பிறவிச் சூழலில் இருந்து விடுபடார் என்றே அருணகிரி கூறுகிறார்.*

*குருநாதன் அருள் இல்லாமல் அவரது திருவருட்சார்பு இல்லாமல் இறையணர்வு கிட்டுதல் மிகக் கடினம். முன்பு நாம் கண்ட திருமந்திர உவமைப்படி சூரிய காந்தமும் (லென்ஸ்), சூரிய ஒளியும், பஞ்சும் சேரும் போது, சூரிய காந்தம், பஞ்சை எரித்து விடுகிறது. சூரிய காந்தத்திற்குப் பஞ்சைச் சுடும் ஆற்றல் இருந்தாலும், சூரியனுடைய சந்நிதியில் தான் அது எரிக்கும். வீட்டுக்குள்ளேயே பஞ்சை வைத்துக் கொண்டு, அதற்கு அருகில் சூரிய காந்தத்தை*

வைத்தாலும் அது எரியாது. இறைவன் அருள் என்றும் உள்ளது, ஆயினும் சத்குருவின் அருளினால் தான் ஆன்மாக்கள் இறைவன் திருவருளைப் பயன்படுத்தி சூரியகாந்தத்தின் ஆற்றலால் பஞ்சு எரிவது போல பகவானது உபதேசத்தால் இறைவனது அருள் ஜீவர்களின் கர்ம வினையை அழித்து, அவர்களை வெறு வெளி அடையச் செய்கிறது.

குருநாதன்திருவருளைப்பெறநமக்குப்பெருந்தடையாக இருப்பது நமது உலகியல் பற்று. பகவான் தேவராஜ முதலியாரிடம் கூறுகிறார்: ''அருள் வெள்ளம் இடையறாது பாய்ந்து கொண்டேதான் இருக்கிறது, நீர் குறுக்கே வராமல் இருந்தால் போதும்'' என்று. ஆயினும் நமது பல ஜன்ம வாசனைகளால் நம்மால் பந்த பாசத்தை விட முடிவதில்லை.

**'அற்றது பற்று எனின்**
**உற்றது வீடு'**

என மிகச் சுருக்கமாக திருமூலர் மொழிகிறார். ஆயினும் நாம் என்ன செய்கிறோம்? நம் பொருட்கள் மீதும், மனிதர் மீதும் பற்று கொண்டு, சதா காலமும் பிரியாமல் இருக்க வேண்டும் என எண்ணுகிறோம். நம்முடன் பிறப்பிலிருந்து இருக்கும் இந்த உடலே, நம் வாழ்நாள் முடிந்த பிறகு நம்மை விட்டுப் பிரிந்து விடுகிறதே? அப்படி இருக்கும் போது பிறந்த பிறகு நாம் பெற்ற தொடர்புகள் நம்முடனே இருக்குமா என்ன? ஆயினும் அவற்றை விட்டு விட்டு நீங்காமல் வருந்துகிறோம். நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட இடையூறுகள் நம்மை ஆத்ம விசாரம் செய்ய விடாமலும், தியானம் செய்ய விடாமலும் தடுக்கின்றன. காலை எழுந்தவுடன் 'இன்று அலுவலக வேலைகள் காத்திருக்குமே! சாயந்திரம் அலுவலகத்திலிருந்து திரும்ப வந்த பின் தியானம் செய்து கொள்ளலாம்' என எண்ணுகிறோம். மாலை வீடு திரும்பிய போது

குழந்தைகளும், மனைவியும் பேசத் துவங்குகின்றனர். அவர்களுடன் பேசிவிட்டு அவர்கள் தூங்கிய பின் தியானம் செய்யலாம் என எண்ணுகிறோம். அவர்கள் தூங்கிய பிறகோ நாமும் தூங்கிவிடுகிறோம். மறு நாள் எழுந்தாலோ, செய்ய வேண்டிய வேலைகள் கண்முன்னே வந்து நிற்கின்றன. இன்று இரவாவது அவசியம் நாம் தனித்திருந்து ஆத்ம விசாரம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம். அன்று முன் வரவிலேயே நமது நண்பர் ஒருவர் வந்து விடுகிறார். 'அவர் என்ன தினமுமா வருகிறார்? பல நாட்களுக்குப் பின்னர் இன்றுதான் பார்க்கிறோம், தியானம் எங்கே போய்விடப் போகிறது; நாளைக்குப் பண்ணிக் கொள்ளலாமே!' என்று ஒத்திப் போடுகிறோம்.

மறுநாள் எழுந்திருக்கும் போது உடல் அசதியாக இருக்கிறது. அன்றைக்கும் தியானம் கைகூடவில்லை. எனவே, நாமே ஏற்படுத்திக் கொண்ட பந்தங்கள் காரணமாகவே நாமும் ஆத்ம விசாரம் செய்வதில்லை. மற்ற பயனற்ற செயல்களைத் தள்ளிப் போடுவதில்லை. ஆனால் நமக்கு எது மிக அவசியமோ அந்த ஆத்ம விசாரணை செய்வதை மட்டும் ஒத்திப் போட்டுக் கொண்டே இருக்கிறோம். எந்தச் செயல் செய்தாலும் செய்யாவிட்டாலும் ஆத்ம தியானம் செய்வது அவசியம் என்ற உணர்வு இருந்தால் எப்படியாவது அந்த நேரத்தில் தனிமையை ஏற்படுத்திக் கொள்வோம். உண்பதுவும், உறங்குவதும் எப்படியாவது நேரம் கண்டுபிடிக்கப்பட்டு செய்யப் படுகிறது. அது போன்றே ஆத்ம விசாரத்தின் மீதும் தீவிர சிரத்தை இருந்தால் எப்படியாவது நேரம் கண்டு பிடித்துச் செய்து விடுவோம். இல்லாவிடில் தனது சுற்றத்துக்கு செய்ய வேண்டியதையே பெரிதாக எண்ணிக் கொண்டு ஆத்ம விசாரத்தை விட்டு விடுவோம். எப்போதாவது அதன் நினைவு குறுக்கே வந்தாலும் மற்றப் பற்றினை விடாமல் இருதலைக் கொள்ளி எறும்பு போல்

தவிக்கிறோம். இதிலிருந்து விடுபட நமக்கு சிரத்தை, அருள் இரண்டுமே தேவை. உண்மையில் சிரத்தை இருந்தால் அருள் தானே வந்து நெறிப்படுத்தும்.

**இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த**
**விதிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்**
**கொருதலை வாமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே**
**பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே.**

**(திருவாசகம்)**

'எம்பெருமானே! இருபுறமும் எரிகின்ற கொள்ளிக் கட்டையின் உள்ளே அகப்பட்ட எறும்பு இரு புறமும் ஓடி உய்தல் அறியாது கெட்டு அழியும். அதைப் போல, உலக ஆசை ஒரு புறமும் உன்னை அடைய வேண்டமென்ற ஆர்வம் மற்றொரு புறமும் இழுக்க, உய்தல் அறியாது கெட்டு அழிகின்றேன். என்னை நீ இப்படி விட்டு விடலாமோ?' என்று வேண்டுகிறார்.

மூவுலகு என்றது; மேல் கீழ் நடு என்ற மூன்று உலகங்களை.

இதனால், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பின் பிரிந்த உயிர், இருதலைக்கொள்ளியின் உள்ளே அகப்பட்ட எறும்பு போல உழலும் என்பது கூறப்பட்டது.

பிறப்பு, இறப்பு என்ற இரண்டுமே, நம் வாழ்வின் இரு முனைகளில் உள்ளன. இரண்டு கொள்ளிகள். இந்த இரண்டுக்கும் இடையே நின்று நிலைகுலைகிறோம். மேலும் முன்னை வினைப் பயனால் சேர்க்கப்பட்ட சஞ்சித கர்மங்களும், இப்பிறவியில் செய்கின்ற புண்ணிய, பாவங்களின் தொகுதியும் இறுதியிலும் உள்ள இரு கொள்ளிகள். இந்த இரண்டிற்கும் நடுவே, பலன் கொடுக்கத் தொடங்கிவிட்ட பிராரப்தத்தில் இருந்து கொண்டு திணறுகிறோம். இதுவே இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை. இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டும் என்று சில சமயங்களில் எண்ணம் வரலாம்.

‘இறைவனுடைய நாமம் சொல்லி, ஆராதனையும், பஜனையும் செய்க!’ என்று சிலர் கூறுகின்றனர். அதைப் பின்பற்றிச் செய்தால், இறைவன் குணம்-குறி கடந்தவன், எனவே பக்தியும், பஜனையும் பயனற்றவை எனச் சிலர் கூறுவதைக் கேட்கிறோம். என்ன செய்வது? என்று அறியாமல் திணறுகிறோம். இதுவும் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை. வாழ்க்கை முழுவதுமே இப்படி இரட்டைகளுக்குள் மாட்டிக் கொண்டு தவிக்கிறோம். பகவானாகிய சத்குருவின் மீது வைக்கப்படும் திண்ணிய பற்று அவரது உபதேசத்தைப் பின் பற்றுதல் ஒன்றே, இந்தத் திண்டாட்டத்திலிருந்து நம்மை விடுவிக்கும்.

எங்கே சென்றாலும் கடல் ஆமைக்குத் தான் கரையில் இட்டு வந்த முட்டைகள் மீதே எண்ணம் இருப்பது போலவும், எத்தனைதான் பேசிக் கொண்டே இருந்தாலும் காரோட்டிக்கு கைச் சக்கரத்தின் மீதே நோக்கம் இருப்பது போலவும், எந்தச் செயல் செய்து கொண்டிருந்தாலும் நமது ஆழ்மனம் ஆன்ம விடுதலை என்ற குறிக்கோளை மறந்துவிடக்கூடாது. இதற்கு வழிவகுக்கும் பகவானது உபதேசத்திலேயே சிந்தை இருக்க வேண்டும். ‘நமக்கு இறையருள் பெறும் தகுதி இல்லையே, எப்படி அவனுடன் ஒன்று படுவது!’ என்ற கவலையே தேவையில்லை. சிரத்தை ஒன்றே அதற்குப் போதும். கங்கையில் போய் நீராடுபவனுக்கு அழுக்கான வேட்டி இருக்கிறதே! என்ற கவலை வேண்டியதில்லை. அங்கே போய் வேட்டியையும் துவைத்துக் கொள்ளலாம், குளிக்கவும், தாகத்தையும் தணித்துக் கொள்ளலாம். பகவானைப் பற்றிக் கொள்வதால் முதலில் மன வேட்டியில் உள்ள அழுக்குகள் போகும். பின்பு ஆன்ம தாகம் தணிந்து அவனுடன் ஒன்று படலாம்.

**‘பற்றுக பற்று அற்றான் பற்றினை அப்பற்றினை**
**பற்றுக பற்று விடற்கு!**

பகவானது அருள் ததும்பும் தோற்றம் நம் எல்லோர் உள்ளத்தையும் ஈர்க்கின்றது அல்லவா? எத்துனை அருள் ததும்பும் விழிகள் அவை! 'பெரியவாய அக்கண்கள் எம்மைப் பேதமை செய்கின்றனவே!' என்று திருப்பாணாழ்வார் அரங்கனை நோக்கி உருகுவது போல் நம்மை உருக்கும் அருள் விழிகள் அல்லவா அவை. ஆயினும் நம் பகவானை நமது புறக் கண்கள் கொண்டு பார்த்தால் மட்டும் போதாது. நம் அகக்கண் திறந்து அகத்தையும் பார்க்க வேண்டும். புறத்தை மட்டும் பார்க்கின்றவர்கட்கு பகவானின் திருவிழிகள் அன்றலர்ந்த தாமரை போல் அழகாகத் தோன்றுகின்றன. ஆனால் அகக்கண் கொண்டு நோக்கும் போது பகவானின் அகிலம் முழுதும் வியாபிக்கும் அருட்கடலைக் காணும் ஆற்றல் உண்டாகிறது. உள்ளத்தே நிரம்பியுள்ள கருணை பொங்கி அவர் திருவிழியிலே ததும்புகிறது என்பதை உணர்கிறோம்.

இராமாயணத்தில் விராதன் இராமபிரானைப் பாடுவது நம் நினைவுக்கு வருகிறது.

***புறம் காண அகம் காணப் பொது முகத்தின்***
***அருள் நோக்கம்***
***இறங்காத தாமரைக் கண் எம்பெருமாஅன்!***
***இயம்புதியால்;***

என்று துதிக்கிறான், விராதன். புறக் கண்ணுக்கு இராமபிரானின் கண் அழகிய தாமரை போல் மலர்ந்து விளங்குகிறது. அகம் காணும் போதோ, அந்தக் கமலக்கண் அருள் நோக்கம் சிறிதும் குறையாது அருட்கண்ணாகப் பொலிகின்றது. இந்த இரண்டையும் யார் காண்கின்றார்களோ அவர்களே பகவானை முழுமையாகக் கண்டவர்கள்.

***'முகத்தில் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்***
***அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்'!***

உள்ளது நாற்பது நான்காவது பாடலில் பகவான்,

**'உருவந்தா னாயி னுலகுபர மற்றா**
**முருவந்தா னன்றே லுவற்றி - னுருவத்தைக்**
**கண்ணுறுதல் யாவனெவன் கண்ணலாற் காட்சியுண்டோ**
**கண்ணதுதா னந்தமிலாக் கண்!'**

என பகவான் குறிப்பிடுகிறார்.

பகவான் தனது ஆன்ம வித்தை கீர்த்தனத்தின் ஐந்தாவது பாடலில் சாதகன் முயற்சி, ஆத்ம விசாரப் பயிற்சி, அதே சமயம் இறையருளின் தேவை அனைத்தையும் பற்றி அழகுறக் கூறுகிறார்

**'விண் ஆதியவிளக்கும் கண் ஆதியபொறிக்கும்**
**கண்ணாம் மனக்கண்ணுக்கும் கண்ணாய் மனவிணுக்கும்**
**விண்ணாய் ஒருபொருள் வேறுஎண்ணாது இருந்தபடி**
**உள்நாடு உளத்துஒளிரும் அண்ணாமலை என்ஆன்மா**
**காணுமே; அருளும் வேணுமே; அன்பு பூணுமே;**
**இன்பு தோணுமே!'**

பகவானின்உபதேசம்இதில்தெளிவாகக்கூறப்படுகிறது. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களையும், நமக்கு எடுத்துக் காட்டுபவை உடல், வாய், மூக்கு, கண், காது ஆகிய ஐந்து இந்திரியங்கள். இந்த ஐந்து பொறிகட்குமே கண்ணாய் இருப்பது மனம். (மனம் முற்றிலும் அடங்கியுள்ள ஆழ்ந்த உறக்கத்தில் வெளி உலகில் எதுவுமே காணப்படுவதில்லை). இந்த மனத்திற்கும் கண்ணாக, அடிப்படையாக விளங்குவது மன ஆகாசம். அந்த மனக் கண்ணுக்கும் கண்ணாய், அடிப்படையாக இருப்பது வெறுவெளியாகிய சிதாகாசம். இதுவே ஆன்மா. இங்கு காணும் கண்ணாகிய ஆன்மா இருக்கிறதே தவிர, அதற்கு வேறாகிய காட்சி இல்லை. இதுவே ஆன்ம விளக்கம்.

இதை அடையும் வழியையும் பகவான் இப்பாடலில் சுட்டுகிறார். இப்படி சிதாகாசமாய், வெறுவெளியாய்

தன்னுள் விளங்கும் ஆத்மாவை வேறெந்த ஒரு பொருளையும் எண்ணாமல், சலனமற்று தன்னுள் தன்னைத் தானே நாட வேண்டும். அப்போது ஒளிமயமாக அண்ணாமலையாகிய ‘ஆத்மா’ ப்ரத்யட்சமாய் உணரப் படும். ஆன்மா தன்னுள் தானாய் இருப்பது என்பதை உறுதியாய் உணர்ந்து மனத்தை உள்நோக்கித் திருப்பி, ஆத்மாவை அடைய முயல்வதே நாம் செய்யும் பயிற்சி. இந்த இரண்டு மட்டுமே ஆத்ம அநுபவத்தைத் தந்து விடாது. மூன்றாவதாக அவனது அருளும் வேண்டும். தனது இருப்பினை அறியும் பெரும் விருப்பமாகிய ஸ்வாத்ம பக்திக் கொண்டால், அருளும் தானே வந்து சேரும்.

எல்லாவற்றிலும் சிறந்த அறிவு எது? முதல் நிலையில் பரந்து அகன்ற இப்பிரபஞ்சத்தை திருசியமாகப் பார்க்கும் ஐந்து இந்திரியங்களின் வாயிலாய் அறியப்படும் அறிவு, மனத்தின் மூலமாகவே அறியப்படுகிறது. அப்போது இந்த மனம் பார்க்கின்ற ‘திருக்கு’ எனப்படுகிறது. இந்த மனத்தின் விருத்தியையும் ஒழுக்கத்தையும் சாட்சியாய் இருந்து காண்கின்ற ஆத்மாவே அறிவு அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவதால் அதுவே பேரறிவு எனப்படுகின்றது. விரிந்து ஒடுங்கும் மன வெளியில் சகலப் பிரபஞ்சமும் ஆகாயத்தில் விண்மீன்கள் போலவும், கோள்கள் போலவும் தோன்றி ஆழ்நித்திரையில் உள்ளே ஒடுங்குகின்றன. எனவே இது ‘மன ஆகாசம்’ எனப்படுகிறது. இந்த மனாகாசமும் (மன வெளியும்) தோன்றி மறையாத ஆன்ம வெளியில் ஒடுங்குகின்றது. எனவே ஆன்மாவே பேரறிவு (சித்) மற்றும் பேருண்மை (சத்) ஆக விளங்குகின்றது. இந்த மகத்தான பேருண்மையை அறிய பகவான் கூறும் உபாயமோ மிக எளிதானது. முன்னிலை, படர்க்கை ஆகிய பிறிது எவற்றையும் எண்ணாமல், இருக்கிறேன் என்ற உணர்வாக நம்முள்ளே

*சதா விளங்கும் தான் என்ற உணர்வை, ஒளியுருவை, உள்ளே நாடினால் போதும். வேறு எந்தப் பொருளையும் நாடாமல், உள்ளிருக்கும் அந்த 'நான்' என்ற உணர்வை நாடினால் அது மட்டுமே போதும். அதுவே அந்தப் பெருநிதியத்தை அடைய பகவான் கூறும் மிக பெரிய வழி.*

***'தானாயிருத்தலே தன்னையறிதலாம்***
***தான் இரண்டற்றதால் உந்தீபற!'***

*மனம் உள்ளே திரும்பி 'நான் இருக்கிறேன்' என்னும் வெறுவெளி உணர்வை நாடும் போது, அது தானாகவே ஒடுங்கி சலனமற்று தன்னில் தானே ஒடுங்குகின்றது. இதையே பகவான்,*

***'வேறு எண்ணாது இருந்தபடி***
***உள்நாடு உளத்து'***

*எனக் குறிப்பிடுகிறார்!'*

*இந்தத் தன் முயற்சி ஆகிய ஆன்ம நாட்டம், உண்முகப் பயணம் மட்டும் போதாது. ஆன்மா தன் அருட் சக்தியால் மனத்தை உள்ளே இழுத்துத் தன்னில் ஒன்றினால் ஒழிய, மனம் தனது வாசனை தோஷத்தினால் மீண்டும், மீண்டும் வெளியே செல்ல முயன்று கொண்டே இருக்கும். இதயத்தில் மூழ்கி ஆன்மாநுபவத்தை அடைய, தன் முயற்சியுடன் குருவருளும் வேண்டும் என்கிறார் பகவான்.*

*'அருளும் வேணுமே!'*

*குருவாசகக் கோவை 648 பாடலில்.*

***'ஆர்வமொடு தன்னை அடிக்கு அர்ப்பணம்***
***செய்தால் வெளியாம்***
***தேவன் அருளாலே தெரிவதனால் - சீவ***
***மதி ஊக்கம் கொண்டு மதித்து உணரல் ஆகா***
***அதி சூக்குமம் மெய் அறி!'***

*இந்த ஆன்மிகப் பாதை அதி சூட்சுமமான வழி. இதற்கு வெறும் ஜீவ அறிவும், சாதனை செய்ய வேண்டும் என்ற*

ஊக்கமும் மட்டுமே போதாது. தன்னை ஆர்வத்தோடு இறைவனுக்கும் அர்ப்பணம் செய்தால் இறையருள் வந்து அணைக்கும். அப்போது ராப்பகலில்லா வெறு வெளியாகி, பரவெளி புலப்படும் என்கிறார் பகவான்.

கண்ணாடியில் தோன்றும் நமது பிரதிபிம்பத்தில் முகத்திலுள்ள கண்கள் நம்மைக் காண வேண்டும் எனில், நமது கண்கள் அதைப் பார்க்க வேண்டும் அல்லவா! அது போல பரம்பொருளின் அருட்பார்வை ஜீவன் மீது வீழ்ந்தாலொழிய ஜீவன் அதனைக் காணமுடியாது. எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும் எல்லா உயிர்களின் இதயத்திலும் 'நான்' இருக்கிறேன் என்ற இருப்புணர்வு சதா காலமும் - விளங்கிக் கொண்டே இருக்கிறது. அது சதா காலத்திலேயும் நம்முள்ளே இருந்தாலும் அதை அறிந்து அனுபவிக்க பேரன்பு தேவை. இதுவே, 'ஸ்வாத்ம பக்தி' தன் ஆத்மா மீது தான் கொண்ட பெருங்காதல் எனப் படுகிறது இதையே 'அன்பு பூணுமே' என்கிறார் பகவான். இந்த ஸ்வாத்மபக்தியால், நம்முள்ளே சதா விளங்கிக் கொண்டிருக்கு அருள் நம்மை வந்து அரவணைத்துக் கொள்கிறது.

''அருள் விலாசமே, இன்ப விகாசமே'' எவ்வளவுக்கு எவ்வளவு பந்த முக்தி பெற வேண்டி விசார சாதனையில் மனம் ஈடுபடுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தன்னை உள்ளே நாடும் மெய் அன்பு மேலோங்கும். இதுவே திருவருள் நம்முள் சுரப்பதற்குச் சான்றாகும்.

இங்ஙனம் உள்முக நோக்கால் தன்னையே கரைக்கும் பக்குவம் எல்லாருக்கும் இருக்குமா என்ன? அந்த அளவு பக்குவம் இல்லாதவரையும் உய்விக்க வேண்டி அருள் கொண்டு, அவர்களை அகமுகமாகத் திருப்ப, அவரே புறமுகமாக ஞானகுருவாக வடிவெடுத்து வந்துள்ளார். அவரே மனித உருவத்தில் வந்துள்ள அருள் வடிவாகிய

*சத்குருவாம் பகவானிடம் ஆழ்ந்த அன்பு செலுத்துவதால், உள்முகமாகத் தன்னை நாடும் விருப்பம் மெல்ல மெல்ல அன்பர் உள்ளத்தில் தலையெடுக்கிறது. சத்குருவையே சதா தியானிப்பதால் மனம் தூய்மை பெறுகிறது. அந்தத் தூய்மை மனதில் மாசுமறுவற்ற வெறு வெளி சுடர் விடுகிறது. அறிவறு கிரியான அண்ணாமலையே, கிரியுருவாகிய கிருபைக் கடலே, நம்முடைய சத்குருவாகிய பகவானாய் அருள் புரிய வேண்டி இங்கே வந்துள்ளதல்லவா! அகமுகமாகி 'நான் இருக்கின்றேன்' என்ற இருப்புணர்வை நாடுவதே நேர்வழி. ஆயினும் எப்போதெல்லாம் நம்மால் அகமுகமாக நாட முடியவில்லையோ, அப்போதெல்லாம் அருணாசலமாகியும், பகவான் திருவுருவாகியும் வெளியே விளங்கிக் கொண்டிருக்கும் அந்தத் திருவுருவின் மீது நீங்காத பக்தி கொள்ள வேண்டும். அப்போது நம்முள்ளே அருள் வெள்ளம் பாயும்; ஸ்வாத்ம பக்தி தூண்டப் பெறும்.*

*ஆங்கிலக் கவிஞரான கோலரிட்ஜ் இறக்கும் போது ஏராளமான முடிக்கப்படாத கவிதைகளை விட்டுச் சென்றார். அவர் இறக்கும் சமயம் அன்பர்கள் அவரைக் கேட்டனர்: 'நீங்கள் ஏன் இத்தனை கவிதைகளை அறைகுறையாக வைத்திருக்கிறீர்களே! ஒரே ஒரு வரியைச் சேர்த்தால் கூட அத்தனை கவிதைகளையும் முடித்துவிடலாமே, ஏன் இப்படி ஒரு வரி மட்டும் எழுதாமல் விட்டுவிட்டீர்கள்?'*

*கோலரிட்ஜ் கூறினார்: 'என்னால் அது முடியாது. நான் எழுதிய இந்த வரிகளெல்லாம் என்னுள் தானாக வந்து இறங்கியவை. நான் எதுவுமே செய்யவில்லை. ஒரு சில பேரானந்தம் மிக்க தருணங்களில் இவை எனக்கு தெரியப்படுத்தப்பட்டன. அவற்றை நான் குறித்து வைத்துக் கொண்டேன், அவ்வளவுதான். நான் ஒரு கருவி மாத்திரமே. இந்தக் கவிதைகளின் இறுதி வரிகள் என்னிடம் இன்னும்*

வரவில்லையே! நான் காத்துக் கொண்டிருந்தேன். அது வந்தால் வந்ததுதான். அது வராவிட்டால் என்னால் ஒன்றும் செய்ய இயலாது!' என்றார். உபநிஷத முனிவர்கள் செய்ததும், இதுதான். அவர்களுக்கு எது தெரியப்படுத்தப் பட்டதோ அதை அவர்கள் குறித்துக் கொண்டனர். முருகனாரிடம் 'ரமண புராணம்' பாடும் போது, ஒரு குறிப்பிட்ட நிலையில் கவிதை வரிகள் ஓடாது, நிறுத்தி விட்டார், அவர் வைத்துச் சென்ற நோட்டுப் புத்தகங்களில் மேலும் வரிகளை பகவானே எழுதிச் சேர்த்தார். பின்னர், புத்தக வடிவில் வரும் சமயம், பகவான் எழுதிய வரிகளை அடிக்கோடிட்டு 'இந்த வரிகள் பகவானால் எழுதப் பட்டவை!' என்று குறிப்பிட்டிருந்தார் முருகனார். அதைப் பார்த்த பகவான் 'ஓ! இது மட்டும்தான் பகவான் எழுதியதோ?' என்று சிரிப்புடன் கேட்டார். கவிதை வரிகள் அனைத்துமே பகவானின் அருளால் நம் இதயத்தில் இறங்குவதே. நம்மால் ஒரு வரி கூட சேர்க்க இயலாது.

'என்னுள் இருந்து இருந்து தமிழ் பாடிய இறைவன்!' என்று நம்மாழ்வாரும், 'எனதுரை தனதுரையாக' என்று ஞான சம்பந்தப் பெருமாள் குறிப்பிடுவதும், 'உமா சஹஸ்ரம்' எழுதிய சமயம் காவ்ய கண்டர் பெற்ற அனுபவமும், குருவருள் தானே வந்து ஆயத்தமாக உள்ள அடியாரின் தூய உள்ளத்தில் இறங்கி, பேரானந்த வெள்ளமாகப் பொங்கித் ததும்புவதைக் காட்டுகின்றன.

திருவருள் மொழித் தொகுப்பு, அன்பர் கேள்விகட்கு பகவானின் விளக்கத்தைக் கூறுகிறது.

அன்பர்: தியானம் பண்ணும் போது கண்களை மூடிக் கொண்டு செய்வதில் பலன் உண்டா?

பகவான்: தியானம் செய்பவர்கள் கண்ணை மூடிக் கொண்டும் இருக்கலாம், திறந்து கொண்டும் இருக்கலாம்.

அது அவரவர் சௌகர்யத்தைப் பொறுத்தது. பார்க்கின்றன கண்கள் அல்ல. கண்ணின் மூலம் பார்க்கிறவன் ஒருவன் இருக்கிறான். அவன் தன் பார்வையை உள்முகமாகச் செலுத்தி விட்டானானால், அவன் கண்கள் திறந்திருந்தும் பார்க்க முடியாது. இந்த இறையினை சன்னல்கள் திறந்திருக்கின்றன. நாம் கண்ணை மூடிக் கொண்ட பிறகு ஜன்னல் மூடியிருந்தால், என்ன திறந்திருந்தால்தான் என்ன?

இந்த உண்மையையே மேலே குறிப்பிட்டபடி பகவான் தனது நான்காவது பாடலில் பகவான் 'கண்ணதுதான் அந்தமிலாக் கண்', எனக் குறிப்பிடுகிறார்.

பகவானின் வாக்கு இதை விளக்குகிறது.

அன்பர்: கண்ணுக்குத் தெரியாமலேயே ரிஷிகள் உலகத்தைக் கண்காணித்து வருகிறார்கள் என்று கூறப்படுகிறதே? பகவானுக்கு அவ்வாறு ஏதாவது தெரிகிறதா?

பகவான்: கண்ணுக்குத் தெரியாமல் என்றால் எப்படிக் காண்பது?

அன்பர்: ஞான திருஷ்டியில்!

பகவான்: ஞான திருஷ்டியில் ஞானத்து அன்னியமாக யாது ஒன்றும் இல்லையே!

ஞானதிருஷ்டியில் அந்தமில்லாத கண் காண்பதே எல்லையற்ற பரவெளி, வெறுவெளி.

மீண்டும் கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

**ராம் மோஹன்**

# ஸ்ரீ ராமகிருஷ்ண மொழியும்!
# ஸ்ரீ ரமண வழியும்!!

***பிர. கிரிதர ஜெகதீஷ்***

*ஐந்து விரல்கள் சேர்ந்து ஒரு பொருளைப் பற்றுவது போல் இயற்கையோடு ஒன்றி வாழ்வதுதான் அறிவு பூர்வமான நல்ல வாழ்க்கை.*

*நல்ல விருந்து ஒன்றின் இறுதியில் தாம்பூலம் வழங்குவது போல மனித உயிர்களுக்கு மட்டும் இறைவன் பகுத்தறிவை வழங்கி பெருமைப் படுத்தியுள்ளார்.*

*மரியாதை, கௌரவம் என்பது ஒரு நுண்ணிய உணர்வு. மனிதனால் மட்டுமே அதை அனுபவிக்கமுடியும். தாம்பூலம் தந்து கௌரவிப்பது மனிதர்களுக்கு மட்டும் தான். மற்ற உயிரினங்களுக்கு மரியாதை தேவையில்லை.*

*இறை உணர்வு என்பது மிக மிக நுண்ணியது; மனிதர்கள் மட்டுமே அதை அனுபவித்து உணரமுடியும்.*

*அனுபவங்கள் எத்தனையோ இருந்தாலும் இந்த ஒரு அனுபவம் மட்டும் இல்லாது போனால் மனம் குறையை பறைசாற்றிவிடும்.*

*இதோ ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மொழியைக் கேட்போம்:*

*வெளியூர் சென்றிருக்கும் ஒருவன் முதலில் தான் இரவு தங்குவதற்கு உண்டான இடத்தைப் பிடிக்க வேண்டும். அங்குத் தனது பொருட்களைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும்; பிறகு இஷ்டம் போல் ஊரைச் சுற்றிப் பார்க்கலாம். இல்லையென்றால் இரவில் தங்குவதற்கு இடமின்றி கஷ்டப்பட நேரிடும்.*

*அது போல உலகம் என்ற ஊரைச் சுற்றிப் பார்க்கும் முன்பு நீ நிரந்தரமாகத் தங்குவதற்கான இடத்தைத் தேடிப் பிடி.*

*விஸ்வாதாரமான இறைவன் தான் அந்த இடம்.*

*இதே கருத்தை ஸ்ரீ ரமண மஹரிஷியின் வழியில் சென்று பார்த்தால் -*

*நான் ஒன்று எழுந்தபின் எல்லாம் எழும்; இந்த நான்*

*எங்கு எழும் என்று நுண்மதியால் எண்.*

*இறைவன் அவரை அறிவதற்கு நம்மிடம் ஒரு விலாசம் தந்திருக்கிறார். அதுதான் நம்மிடம் உள்ள நான் என்ற உணர்வு. கல்லும், மண்ணும் காலமும் தோன்றா நிலையில் முதலில் தோன்றியது இதுதான்.*

*அணுவை உடைத்து அதன் ரகசியத்தை அறிந்த விஞ்ஞானிகள் போல, நான்-ஐ உடைத்து அதனுடைய உண்மையை உணர்ந்தார்கள் நமது மஹரிஷிகள்.*

*தனது அனைத்துப் படைப்பிற்கும் ஆதாரமாக நான் என்ற குறிப்பை நமக்கு இறைவன் தந்திருக்கிறார்.*

*குடகு மலையில் சிறிதாக ஊற்றெடுக்கும் காவிரி ஆறு விரிந்து பரந்து பெரிய நதியாய்ப் பிரவாகிப்பது போல, நான் என்ற உணர்வின் மேல் இந்தப் பிரபஞ்சம் கட்டப்பட்டு நின்று கொண்டிருக்கிறது. சிப்பிக்குள் முத்து போல இந்த நானுக்குள் இறைவன் இருக்கிறார். முதலில் இதை நீ அறி. இல்லையென்றால் உயிர், உலகம், கடவுள் சம்பந்தமான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி இல்லாமல் துயரப்படுவாய்.*

***அருள்தாகம்:***

*இறைவனைக் காண எப்படிப்பட்ட மனம் வேண்டும்?- என்று சிஷ்யன் குருவிடம் கேட்டான். குரு பதில்*

சொல்லவில்லை. அவனை நேராக நதிக்கு அழைத்துச் சென்றார். தண்ணீருக்குள் சிஷ்யனின் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டார். சிறிது நேரம் கழித்துப் பிடியை தளர்த்தினார். தலையை உந்தித் தள்ளிக் கொண்டு சிஷ்யன் மேலே எழுந்தான்.

தண்ணீருக்குள் இருக்கும் போது உன் நிலை என்ன? என்று குரு கேட்டார். காற்றைத்தவிர வேறு எந்த நாட்டமும் இல்லை என்றான் சிஷ்யன்.

இறைவனை அறியும் ஆசை உன் உள்ளத்தில் அவ்விதம் இருக்கட்டும்! என்றார் குரு.

பரமஹம்ஸர் கூறும் இதே அருள்நாட்டம் கொண்ட உள்ளத்தை பகவான் ரமண மஹரிஷி எவ்விதம் கூறுகின்றார் என்று நோக்குவோம்.

**அருணாசலம் என அகமே நினைப்பவர்**
**அகத்தை வேர் அறுப்பாய் அருணாசலா!**

அனைத்து உயிர்களும் ஆனந்தத்தைத் தேடுகின்றன. தடையற்ற ஆனந்தமாக இறைவன் மட்டுமே இருக்கிறார். அந்த ஆனந்தத்தை அடைய வேண்டும் என்றால் மற்ற சிற்றின்ப அனுபவங்களை விட்டுவிடும் துணிச்சல் வேண்டும். மேலான இன்பத்தை ஒரு வேளை அடைய முடியாது போனாலும் பரவாயில்லை, சிற்றின்பத்தை நோக்கிக் கீழே இறங்கமாட்டேன் என்ற தைரியம் வேண்டும்.

நன்கு கூர் தீட்டப்பட்ட உளி தான் பாறையைப் பிளக்கும். தீவிர அருள் நாட்டம் என்ற வஜ்ராயுதமே அஞ்ஞானத்தை அழிக்கும்.

அனைத்து உலக காரியங்களைப் பற்றிய எண்ணங்கள் மேல் மனதில் ஓடிக் கொண்டிருக்கட்டும், ஆனால் ஆழ்ந்த மனதில் அருணாசலனை மட்டும் நாடு.

**வைராக்கியம்:**

***எழும்பும் அகந்தை எழும் இடத்தை நீரில்***
***விழுந்த பொருள் காண வேண்டி மூழ்குதற்போல் -***
***கூர்ந்த மதியால் பேச்சு மூச்சு அடக்கிக் கொண்டுள்ளே***
***ஆழ்ந்து அறிய வேண்டும் அறி!***

ஆழமான நீர் நிலையில் விழுந்த ஒரு பொருளை எடுக்க முற்படுபவன் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் சாதாரண பிரயத்தனத்தோடு நீருக்குள் மூழ்க முடியாது. பேச்சை நிறுத்தி மூச்சை அடக்க வேண்டும். அப்பொழுதுதான் நீரின் அழுத்தத்தை எதிர் கொள்ள முடியும். பொருளை எடுத்துக் கொண்டு மீண்டும் கரைக்கு திரும்பும் வரை காற்றின் கும்பகத்தை விட்டுவிடக்கூடாது.

இறைவனின் யதார்த்த சொரூபத்தைக் காண வேண்டும் என்றால் அவரது மாறுவேடத் தோற்றமான இந்த உலகத்தின் மீதுள்ள கவர்ச்சியின் பிடியைத் தளர்த்த வேண்டும்,

ஓடு மீன் ஓட உறுமீன் வரும் அளவும் வாடி இருக்குமாம் கொக்கு என்ற பழமொழிக்கு ஏற்ப உலகத்திலுள்ள சுக அம்சத்தை விட்டுவிட்டு உண்மையை எதிர்நோக்கத் தயாராக இருக்க வேண்டும்.

ஆத்ம சாதனத்தில் வைராக்யம் என்ற அம்சத்தை பரமஹம்ஸர் எவ்விதம் படம் பிடிக்கிறார் என்று பார்ப்போம்.

குழந்தை தன் தாயை மறந்து விளையாட்டு பொம்மைகளோடு விளையாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் விளையாட்டு பொம்மைகளைத் தூக்கி எறிந்து விட்டு தாயை மட்டும் நாடிக் கதறி அழுகிறது. அது போல் உலகில் எதுவும் உன்னைத் திருப்திப் படுத்த முடியாது என்ற எண்ணம் ஓங்கும் போது நீ அவைகளை ஒதுக்கிவிட்டு இறைவனை அழைப்பாய்.

பொம்மை விளையாட்டில் இருந்து கொண்டே தாயை அழைக்க முடியாது, சிரேயஸான செம்பொருளை அடைய வேண்டும் என்றால் பிரேயஸான பிரபஞ்சத்தை விட்டுத்தான் ஆகவேண்டும்.

**நான்- ஐ கையாளும் விதம்**


இந்த உலகில் உள்ள கட்டுக்கதைகளில் மிகப் பெரிய கட்டுக் கதை எதுவென்றால் அதுதான் நம்முடைய அகந்தையாகிய நான். பொய்யிலும் பொய் என்று பக்தர் ஒருவர் பாடியுள்ளார்.

உடல் நான் என்று சொல்லாது, ஏனெனில் அது ஜடம். மனம் நான் என்று சொல்லாது, ஏனெனில் ஆழ்ந்த உறக்கத்தில் இல்லாமல் போகிற மனதிற்கு நான் என்ற அர்த்தத்தைத் தரமுடியாது. ஆத்மாவோ எங்கும் வியாபித்துள்ள அறிவு மயம். அதற்கு அந்நியமாக எதுவும் இல்லை. ஆகவே அதுவும் நான் என்று சொல்லாது.

பிறகு நான் என்று சொல்லப்படும் சொல்லிற்குரிய பொருள் எது? இதற்கு விடையளிக்கிறார் ரமணர்.

திருமண விழாவில் விருந்தினர் போல் கலந்து கொண்ட தந்திரமான திருடன் ஒருவன் தாராளமாக விருந்தை உண்டு மகிழ்ந்தான். மேலும் பொருள்களை அபகரித்துக் கொண்டு போக திட்டமிட்டிருந்தான். நுண்மான் நுழைபுலம் கொண்ட புத்திசாலி ஒருவர் இவனது செயலில் சந்தேகம் கொண்டார். யார் என்ன என்று விசாரித்தார். மாப்பிள்ளை வீட்டாரிடம் தான் பெண் வீட்டுச் சொந்தம் என்றும், பெண் வீட்டாரிடம் தான் மாப்பிள்ளை வீட்டுச் சொந்தம் என்றும் மாறி மாறி உளறினான் திருடன்.

இரு வீட்டாரையும் சேர்த்து வைத்து விசாரித்தார் அறிஞர். அந்தக் கள்வனின் பொய்மை வெளிப்பட அவன் ஓடி மறைந்தான்.



இது தான் அகந்தையின் சொரூபம். தனக்கு என்று ஒரு ரூபம் இல்லாதது. உடலையோ, மனதையோ பிடித்துக் கொண்டு உயிர்வாழும் ஒரு அதிசயப் பிறவி.

இது என்ன என்று நானின் வேரைத் தேடினால் அதனுடைய குறுகிய தோற்றம் மறைந்து சச்சிதானந்தம் மட்டுமே எஞ்சி நிற்கும்.

இதையே சற்று பக்தி மொழியில் கூறுகிறார் பரமஹம்ஸர்.

உன்னிடம் உள்ள நான்-ஐ குண்டூசி அளவிற்குத் தேய்த்துச் சிறிதாக்கு. அல்லது இமயத்தின் அளவிற்கு பெரிதாக்கு.

குண்டூசியையோ அல்லது இமயமலையையோ கயிற்றினால் கட்டமுடியாது.

பக்தி என்ற வலையில் குண்டூசியாய் விடு அல்லது விசாரம் என்ற இமயத்தோடு சேர்ந்து விரிந்துவிடு. பிறகு உன்னிடம் உள்ள நான் உன்னை பந்தப்படுத்தாது.

இந்தவிதத்தில் கையாளப்படும் நான் குறுகிய அகந்தை அல்ல. அது ஈசன் நமக்குத் தந்த அடையாள அட்டை.

**உலகத்தைப் பார்க்கும் விதம்.**

ஒரு பெரிய திரையில் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் சினிமா போல உலகம் தோன்றிக் கொண்டிருக்கிறது, உறவுகள், ஆசைகள், மதிப்பீடுகளில் சிக்கி மனிதன் துடுப்பில்லாத படகு போல அலைகின்றான்.

ஐம்புலன்களை உலகம் என்று உபநிஷத்துகள் தெளிவாக சொல்லியுள்ளன. ஐம்புலன்கள் தெரிவிக்கும் அறிவிப்பில் மனிதன் அபார நம்பிக்கை வைத்துள்ளான். ஐம்புலன்கள் தரும் இன்பம் ஒவ்வொன்றும் துக்கயோனி என்று பகவான் கீதையில் கூறுகின்றார். ஒவ்வொரு இன்பமும் துயர அனுபவத்தை கொடுத்தே தீரும்.

மம மாயா துரத்யயா எனது மாயை கடப்பதற்கு அரிது என்று பகவான் கூறுகின்ற இந்த மாயா உலகத்தை கடப்பது அல்லது புத்திசாலித்தனமாக கையாள்வது என்பது எப்படி ?

ரமணர் சொல்கிறார்:

***ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது***
***அகத்தில்நீ இலையோ அருணாசலா! (அக்ஷரமணமாலை, 11)***
***ஒருவனாம் உன்னை ஒளித்துஎவர் வருவார்***
***உன்சூதே இது அருணாசலா! (அக்ஷரமணமாலை, 12)***

சாஸ்திரம் உலகத்தை தடஸ்த்தலக்ஷணம் என்று கூறியுள்ளது. ஒரு தெருவில் பத்துவீடுகள் ஒரே மாதிரி இருக்கின்றன. நாம் தேடிச் சென்ற நபர் அந்த வீடுகளில் ஏதோ ஒரு வீட்டில் இருக்கிறார். பச்சை வர்ணம் பூசப்பட்ட கதவுள்ள வீடு என்று அடையாளம் காட்டப்பட்டு, நாம் அந்த நபரைப் பார்த்து விடுகிறோம்.

அந்தப் பச்சைக் கதவு செய்கின்ற வேலையைத்தான் இந்த உலகம் செய்கிறது. இறைவனை அறிந்து, அடையும் அடையாளமாக இந்த உலகம் இருந்து கொண்டிருக்கிறது.

ஹே அருணாசலா! மாயையின் துணை கொண்டு நீ நடத்தும் ஒரு ஏமாற்று வேலைதான் இந்த உலகம். உனக்கு அந்நியமாக இங்கு என்ன இருக்க முடியும்? என்கிறார் ரமணர்.

நமக்கு மிகவும் பிடித்தமானவர் செய்த குறும்பான செயலில் நமக்குக் கோபம் வராது. வேடிக்கையாக ஏற்போம், ரசிப்போம். சர்க்கரையால் சிறுவர்களுக்காக விதவிதமான மிட்டாய்கள் செய்திருப்பார்கள். காக்கை, குருவி, சிங்கம், மான், மயில் என்று பலவித வடிவங்களில் மிட்டாய்கள் இருக்கும். சிறுவர்கள் எனக்கு மான்தான் வேண்டும், எனக்கு மயில்தான் வேண்டும் என்று தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். அறிவில் வளர்ந்தவர்கள் வடிவத்தை நீக்கி, ஆதாரமான, ஒன்றேயான சர்க்கரையை உணர்ந்து சமாதானம் அடைவார்கள்.

உலகத்தை எப்படிச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தருகிற குறிப்புச் சீட்டு எவ்வளவு அற்புதமானது!. ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம், உலகத்தை ஈஸ்வர திருஷ்டியால் மூடிவிடு! என்கிறது ஈசாவாஸ்ய உபநிஷதம்.

வெற்று வடிவங்களில், தோற்றங்களில் சிக்கி துயரப் படாதே! அனைத்து வடிவங்களுக்கும், தோற்றங்களுக்கும் ஆதாரமான பொருளை உணர்ந்து அமைதி பெறு!

கங்கையின் இரு கரைகள் போல இவ்விரு மகான்களின் உபதேசங்கள் நம்மை அருட்கடலை நோக்கி அழைத்துச் செல்கின்றன.

# நான் யார் தெரியுமா?

### *பகுதி -10*

### *டாக்டர்.ஏ.வி.ராஜகோபாலன்*

*இந்திய வேதாந்தத்தின் அடிப்படையாகக் கருதப் படுபவை உபநிஷதங்கள், பிரம்மசூத்திரம் மற்றும் பகவத் கீதை, இவற்றை பிரஸ்தான த்ரயம் என்று கூறுவார்கள். இவற்றுள் கீதை மிகவும் பிரசித்தமானது. கதை வடிவில் எழுநூறு ஸ்லோகங்களில் பக்தி, ஞானம், கர்மம் என்னும் மூன்று மார்க்கங்களையும் அழகுடன் தெளிவுபடுத்துகிறது இந்த நூல். இதற்குப் பல உரைகள் அமைந்துள்ளன. வேதாந்தத்தின் நுழைவாயிலில் இருப்பவர்கள் கூட கீதையின் முக்கிய தத்துவங்களை நன்கு அறிவர்.*

*உபநிஷதங்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்டவை. இவற்றுள் ஆதிசங்கர பகவத் பாதர் உரை எழுதிய பத்து உபநிஷதங்கள் பிரதானமாக கருதப்படுகின்றன. இவை ஈச, கட, கேன, முண்டக, மாண்டூக்ய, ஐத்ரேய, பிரஸ்ன, தைத்தரீய, சாந்தோக்ய. ப்ருகதாரண்யக உபநிஷத்துக்கள் ஆகும். இவையும் மக்களிடையே ஓரளவு பிரபலமானவை. உபநிஷத விளக்கங்கள் கதை, உரையாடல், மற்றும் உபதேச முறையில் அமைந்துள்ளன.*

*பிரம்மசூத்ரம் - பிரம்ம சூத்ரம் மற்ற இரண்டு நூல்களினின்றும் சற்றே மாறுபட்டது. சூத்ரம் என்ற வகை நூல்கள் வடமொழியில் பல துறைகளிலும் உள்ளன.*

இவை ஒரு கருத்தை மிகவும் சுருக்கமாகச் சொல்லுபவை. இந்த வகைக் கிரந்தங்களின் இலக்கணம் பற்றி ஒரு விளக்கம் காணப்படுகிறது. சூத்திரங்கள்,

*1 அல்பாக்ஷரம் - குறைந்த எழுத்துக்களுடன்*

*2 அஸம்திக்தம் - மிகத் தெளிவாக*

*3 சாரவத் - சம்சயத்திற்கு இடமின்றி*

*4 விஸ்வதோ முகம் - எல்லாவிதமான கருத்துக்களையும் உள்ளடக்கியதாய்*

*5 அஸ்தோபம் - ஒரே முறை (திரும்பத் திரும்ப உரைக்காமல்) சொல்வதாய்*

*6 அனவத்யம் - குறைகளற்றதாய்*

*இருக்க வேண்டும். இல்லாவிடில் அதை சான்றோர் ஏற்கமாட்டார்கள். (பத்ம புராணம்).*

*பிரம்ம சூத்ரம், இந்த இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்த உன்னத கிரந்தம். இது படித்து அறிய சற்றே கடினமான நூல். பொருள் எளிதில் விளங்காது. ரத்ன சுருக்கமாக மாபெரும் தத்துவங்களை விளக்கும் சுலபத்தில் பொருள் விளங்காத நூல். இதன் ஆசிரியர் பாதராயணர் ஆவார். இவரே வியாசர் என்றும், இல்லை வேறோருவர் என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன. இது பழமையான நூல். மேக்ஸ்முல்லர் போன்ற நூலாசிரியர்கள் இது பகவத் கீதைக்கும் முற்பட்டது என்று கருதுகிறார்கள்.*

*சங்கரர், ராமானுஜர், மத்வர் ஆகிய மூன்று மதாசாரியர்களும் தத்தம் சித்தாந்தத்திற்கு ஏற்ப இந்த நூலுக்கு உரைகள் எழுதியுள்ளனர். வேறு பலரும் இந்த நூலுக்கு உரைகள் எழுதியுள்ளனர். இதில் உள்ள சூத்திரங்கள் மிகச் சுருக்கமாக இருப்பதாலேயே இந்நூலுக்கு அத்வைத - விஸிஷ்டாத்வைத - த்வைத*

*சித்தாந்தங்களுக்கு ஏற்ப உரை எழுத இடம் கிடைத்துள்ளது. சங்கரர் கணக்குப்படி இதில் 555 சூத்திரங்கள் உள்ளன. ஏனையோர் உரையில் இந்த எண்ணிக்கை மாறுபடுகிறது. இதில் மொத்தம் 192 அதிகரணங்கள் உள்ளன.*

*சூத்திரம் என்ற சொல்லுக்கு பொதுவாக வடமொழியில் கயிறு அல்லது நூல் என்ற பொருள் உண்டு. இதைக் கருத்தில் கொண்டே காளிதாசன்.*

***அதவா கிருத வாகத்வாரே***
***வம்சேஸ் மின் பூர்வசூரிபி:***
***மணௌ வஜ்ர சம்ஸ்கீர்ணே***
***சூத்ரஸ்யே வாஸ்தி மேகதி!***

***- ரகுவம்சம்***

*(பூர்வாசிரியர்களின் உரைகள் என்னும் துவாரத்தில் வழியாக நூலைக் கோர்த்து, இந்த ரத்னங்களை இணைக்கிறேன்).*

*இந்நூல் முழுவதும் பிரம்மத்தையே ஆராய்கிறது. இதன் முதல் சூத்ரம் வருமாறு.*

***அதாதோ பிரம்ம ஜிக்ஞாசா! (1.1.1)***

*இந்த உயர்ந்த நூலை எல்லோரும் படிக்க இயலாது. இதைக் கற்க, சாதகன் நல்ல நூலறிவு, அநுபவம் மற்றும் உள்ளுர்வுகள் படைத்தவனாதல் அவசியம். அத என்ற சொல்லிற்கு வியாக்கியானங்கள், புலனடக்கம், நூலறிவு, உண்மையை அறிய தீவிர ஆவல் போன்ற பல நிபந்தனைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்.*

*ஆனந்தமயமான பிரம்மம் - பிரம்மம் ஆனந்த மயமானது என்பது பிரம்ம சூத்திரத்தில் பலமுறை வற்பறுத்தப்படும் வாதம். இதற்கு தைத்திரய உபநிஷதத்தில் வரும் பிருகு என்ற முனிபுங்கவனின் வேதாந்தப் பயணம் சிறந்த உதாரணம். அவர் அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய கோசங்களை முதலில் பிரம்மமாக*

*உணர்கிறார். அவர் தந்தை அவரைத் திரும்பத் திரும்ப தவம் செய்து பிரம்மத்தின் உண்மை நிலையை அடைய வற்புறுத்துகிறார். பிருகுவும் தவத்தால் ஆனந்த வடிவமானது பிரம்மம் என்று உணர்கிறார்.*

*இதைக் கீழ்க்கண்ட சூத்திரம் விளக்குகிறது ஆனந்தமய அப்யாஸாத் (1.1.12) திரும்பத் திரும்ப உணரப்படுவதல், என்ற கருத்தை அப்யாஸா என்ற சொல் விளக்கும். இந்த ஆனந்த நிலையே கீதையில் துஷ்யந்தி ச ரமந்து ச என்று விளக்கப்படுகிறது (பக்தர்கள் இறைவனின் பேரின்பப் பேற்றை அடைந்த நிலையில் மெய்மறந்து போகின்றனர்). தேவாரத்தில் இந்நிலை மேலும் விளக்கப்படுகிறது.*

*இன்பமே எந்நாளும் துன்பமில்லை*

*ரமணப் பெருமாள் இதை மேலும் விளக்குகிறார்.*

***கையினிற் கனியுன் மெய்ரசங் கொண்டுவ***
***கைவெறி கொளவரு ளருணாசலா!***
***(அக்ஷரமணமாலை 23)***

*இதில் இரண்டு சொற்கள் மிக முக்கியமானவை. உன் மெய்ரசம் கொண்டு (பரம்பொருளின் ரசமான மதுவைப் பருகி) உவகை வெறி கொள (அதனால் ஆனந்த வெறி நிலையை எய்தி) என்பவையே அவை. இது முன் குறிப்பிட்ட சூத்திரத்தை மேலும் விளக்குகிறது. வேறு சில சூத்திரங்களும் இக்கருத்தை ஊர்ஜிதம் செய்கின்றன.*

***விகார சப்தாத் நேதிசேத், நப்ராசுர்யாத் (1.1.13)***
***தத்தேது வ்யப தேசாச்ச (1.1.14)***
***நேதர: அனுபபத்தே: (1.1.16)***

*இந்த ஆனந்த நிலையை மற்றொரு ஜீவாத்மாவையோ, ஜடப்பொருளையோ குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. இது பரம்பொருள் ஒன்றிலேயே அடங்கும். இந்நிலை சாயுஜ்யம் என்று குறிப்பிடப்படும் (சாயுஜ்யம் - உடன் உறைதல்).*

***எதிரி:***

*இந்த ஆனந்தமய நிலைக்கு உதவியாக, எதிராக உள்ளவை ஆத்மாவே, இதைக் கீதை -*

***ஆத்மைவஹ்யாத் மனோ பந்து:***
***ஆத்மைவ திரிபுபாத்மன:!***

*(தானே தனக்கு நட்பும் பகையமாகும்)*

*இதற்கு புறநானூறு என்ற பதினெண் மேல் கணக்கு நூலில் அழகிய இலக்கணம் காணலாம்.*

***தீதும் நன்றும் பிறர் தர வாரா***

*பிரம்ம சூத்திரம் இந்நிலைக்கு சுருக்கமான விளக்கம் சொல்கிறது.*

***ஜ்யோதிராதி - அதிஷ்டானம் துதத் ஆமனனாத் (11.4.14)***
***ப்ராணவதா சப்தாத் (11.4.15)***
***தஸ்ய ச நித்யத்வாத் (11.4.16)***

*புலன்களின் ஆதிக்கத்தை இவை விளக்குகின்றன. அக்னி போன்ற வெளிச்சக்திகளும்* (external force) *ஆத்மாவாகிய உட்சக்தியும்* (internal force) *புலன்களை ஆட்டுவிக்கின்றன. பிருக தாரண்யகம் (11.1.18) மற்றும் தைத்தீரீய உபநிஷதம் (11.8.1) இக்கருத்தை வலியுறுத்துகிறது. பிரம்ம சூத்திரம் இந்தக் கருத்தை மேலும் அழகுபட சொல்கிறது. அனுபவிப்பது ஆத்மா என்ற சுடரே தவிர புலன்கள் என்ற தனிப்பட்ட அமைப்புகள் அல்ல. இந்த உறவு எஜமானனுக்கும் சேவகர்களுக்கும் உள்ள உறவு போன்றதாகும். சேவகனுக்குத் தனி அதிகாரம் கிடையாது. ஆனால் செயலாற்றும் திறன் உண்டு. அவனுக்குச் சில தனித்தன்மைகள்இருந்தாலும்எஜமானனின்ஆதிக்கத்திற்கு உட்பட்டே அவை அமைகின்றன. ஆதலால் அனுபவம் என்னும் சக்தி புலன்களிடத்தே இல்லை.அவற்றையாளும் எஜமானனே அதற்கு அதிபதி.*

புலன்களின் வழிவரும் இன்பத்தைச் சான்றோர்கள் பல இடங்களில் சாடுகின்றனர்.

**இந்த உடல் உயிரை எப்பொழுதும் தான் சதமாய்**
**பந்த முற்று நானும் பதம் அழிந்தேன் பூரணமே!**

என்று பட்டினத்தார் உடல் மூலமான பற்றுகளை அழித்தலின் அவசியத்தைக் கூறுகிறார்.

ரமணர் கோட்பாடு - பிரஸ்தானத்ரயத்தின் விளக்கமே ரமண உபதேசம். பல இடங்களில் நயமாகவும், சில இடங்களில்அதட்டியும்அவர்உபதேசங்கள்அமைகின்றன. அருணாசல அஷ்டகத்தில் அழகியதோர் பாடல் இதை நன்கு வெளிப்படுத்தும்.

**இன்றுஅகம் எனுநினைவு எனில்பிற ஒன்றும்**
**இன்றுஅது வரைபிற நினைவுஎழில் ஆர்க்குஎற்கு**
**ஒன்றுஅகம் உதிதலம் எதுஎன உள்ளாழ்ந்து**
**உளத்தவிசு உறின்ஒரு குடைநிழற் கோவே**
**இன்றுஅகம் புறம்இரு வினைஇறல் சன்மம்**
**இன்புதுன்பு இருள்ஒளி எனும்கனவு இதய**
**மன்றகம் அசலமா நடமிடும் அருண**
**மலையெனும் எலையறும் அருளொளிக் கடலே!**
**(அருணாசல அஷ்டகம் 7)**

இப்பதிகம் பிரம்ம சூத்திரத்தின் தத்துவ சுருக்கத்திற்கு பிரதிபலிப்பான ஒரு விளக்கமாக அமைந்துள்ளது ஒரு சிறந்த அம்சம். அகம் எனும் நினைவு இன்று எனில், பிற ஒன்றும் இன்று என்பது எளிமையான சொற்சொடர். நான் என்னும் **பா**வம் புலன்களுக்குத் தீனி போடுகிறது. அது ஆட்சி செய்யும் உள்ளத்தில், பிரம்மம் எனும் பிரகாசம் தோன்றாது. மற்ற எண்ணங்கள் தோன்றும் போது, இந்த எண்ணத்தின் மூலத்தை அறிதல் வேண்டும் (Epistemology of I). இவ்வாராய்ச்சி எனக்கு (மமகாரம்) என்ற பிரதிபலிப்பை சுட்டிக் காட்டும். இந்த நான் என்னும் அரக்கனை ஆராய்ச்சி செய்து அந்த மூலத்தை விசாரித்து ஒன்றிவிட்டால், நம்முடைய தகராகாசத்தில் உள்ள

ஒப்பற்ற அருள் கொடையின் கீழ் உலகனைத்தையும் ஆட்சி செய்யும் பரம் பொருள் ஆக நீ ஆகிறாய். மேற் கூறிய பதிகத்தின்,

**உள் ஆழ்ந்து உளத்தவிக உறின்**
**ஒரு குடை நிழற் கோவே**

என்ற வரிகள் உபநிஷதங்களில் கூறப்படும் ஸ்வராட் என்ற தத்துவத்தின் விளக்கமாகும். இந்நிலையில் இருமைகள் விலகும். இதை ரமணர் அகம், புறம் இரு வினை என்பர். இது உள்ளும் புறமுமான தீவினைகளைக் குறிக்கும் பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம் என்பன எல்லாம் இரு வினைகளாகும். அஞ்ஞான நிலையில் இவை நினைவாகத் தோன்றும். இந்த ஜீவபோதம் பிரம்ம அனுபவத்திற்கு எதிரி. இந்நிலை நீங்கி ஞான ஒளி உள்ளே புகுமாயின், இதயசிங்காசனம் என்னும் சுரங்கம் திறக்கிறது. இங்கு நான் என்ற உணர்வுகளுக்கு இடமில்லை. இதுவே அருணாசலம். அசலம் என்றால் சலனமற்றது என்று பொருள்படும். எதற்கு ரமணப் பெருமான் அசலமா நடமிடும் அருணமலை? என்று குறிப்பிடுகிறார். அசலமும் மலையும் ஒன்றேயல்லவா! இதனால் புனருக்தி தோஷம் (ஒரு கருத்தைப் பலமுறை கூறல்) என்ற குறை வருகிறதே?

இங்குதான் நான் யார் தெரியுமா? - என்ற நிலைக்கு ஒரு விளக்கம் கிடைக்கிறது. அகம் உதிதலம் எது என ஒன்று என்கிற சொற்சொடர் மூலம் நமக்கு ரமணர் நல்லுரை கூறுகிறார். நான் யார் தெரியுமா - என்பது ரஜோ குணத்தின் உச்சகட்டம். இதையே ணிநிளி (Evicting God Out) என்று கூறுவர். அந்த அகம்பாவம் எங்கிருந்து உதிக்கிறது என்று ஆராய்ந்தால், இதற்குப் பிரம்ம சூத்ரம் ஒரு ஏணிப்படியாக அமைகிறது. இங்குச் சலனமற்ற (அசலம்) ஜீவன் அருணமலை என்னும் பிரமத்தில் நடமிடுகிறது.

முதல் சூத்திரத்திற்கு மறுபடியும் செல்வோம். அதாதோ பிரம்மஜிக்ஞாசா! என்பது முதல் சூத்திரம்.

*சேதனன் தன் அகம்பாவ நிலையை விடுத்து, நான் யார், என்னும் தத்துவ ஒளியை உள்ளே பார்க்க ஆரம்பிக்கும் மனப் பக்குவம் பெற்ற நிலையில் பிரம்ம சூத்திர உபதேசத்தைப் பெறக்கூடிய தகுதியை அடைகிறார். அடுத்த சூத்திரம் ஆனந்த மய அப்யாசாத் (1.1.12) என்று பார்த்தோம். இதுவே ரமணர் காட்டும் எலையறும் அருள் ஒளிக்கடலே நிலையாகும். எல்லையற்ற இன்ப நிலையே உபநிஷதம் காட்டும் பூமா நிலைபாடு. இந்த பூமா நிலைக்கு வந்த சாதகன் சாமீப்ய, சாரூப்ய நிலைகளில் பரம் பொருளோடு ஒன்றுகிறான். இருமையின் தாக்கம் நீங்கி உள்ளொளி பெற்றவனாகிறான். இதையே பகவான் உளத்தவிசு உறின் என்று குறிப்பிடுவார். அது இதய சிங்காசனம். அங்கு சாதகன் ஒரு மாமன்னனாக யாருக்கும் அடிமையற்றவனாக ஒளிர்கிறான். நீட்ஷே என்ற மேனாட்டு சிந்தனையாளர் மாமனிதன் என்பவனை உடல்பலமும், மேலாண்மையும் மட்டுமே உடையவனாக காட்டுவார். பிரம்ம சூத்திரம் காட்டும் மாமனிதன், வெளித் தளைகள் நீங்கிய ஒரு ஏகசக்ராதிபதியாக இருக்கிறான். இதுவே பாரத கண்டத்தின் மெய்ஞானம்.*

*இந்நிலையையே, பிரம்ம சூத்திரம் விளக்குகிறது. முன் குறிப்பிட்ட சூத்திரங்களை மறுபடியும் பார்ப்போம்.*

***விகார சப்தாத் நேதி சேத் நப்ராசுர்யாத்***
***தத்தேது வ்யபதேசாச்ச, நேதர: அனுபபத்தே:***

***(1.1.13,14,16)***

*இது மற்றொரு ஜீவாத்மாவிலோ, ஜடப் பொருளிலோ அடக்க இயலாது. பிரம்மத்திலேயே இது அடங்கக் கூடியது. அடுத்ததாக எழக் கூடிய கேள்வி, இது எத்தகையவருக்கு கைகூடும்? கீதையில் கண்ணபிரான் (மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஸ்சித் யததி சித்தயே) ஆயிரத்தில் ஒருவருக்கே இத்தகைய நிலை கைகூடும் என்பர். இதற்கு சுலபமான வழி எதுவும் உண்டா, இல்லை.*


இதைத் தூரத்தில் நின்று கலங்கரை விளக்கைப் பார்க்கும் சாமானியன் போல திகைத்து நின்று வியத்தல் மட்டுமே சாத்தியமா?

இதற்கு ரமண பெருமானின் அடுத்த பாடல் வழி காட்டுகிறது.

**கடல்எழும் எழிலியால் பொழிதரு நீர்தான்**
**கடல்நிலை அடைவரை தடைசெயில் நில்லாது**
**உடல்உயிர் உனில்எழும் உனைஉறு வரையில்**
**உறுபல வழிகளில் உழலினும் நில்லாது**
**இடவெளி அலையினும் நிலையிலை புள்ளுக்கு**
**இடம்நிலம் அலதுஇலை வருவழி செல்லக்**
**கடன்உயிர் வருவழி சென்றிட இன்பக்**
**கடல்உனை மருவிடும் அருணபூ தரனே**
**(அருணாசல அஷ்டகம் 8)**

இது ஒரு divine dispensation என்ற சித்தாந்தம். கடலில் இருந்து உண்டாகும் மழைநீர் திரும்பவும் கடலைச் சேரும் வரை எத்தகைய இடையூறு ஏற்படினும் நில்லாது. அதே போன்று ஜீவாத்மாக்கள் பரம்பொருளினின்று தோன்றி, வினைப்பயனாக பல பிறப்புகளைப் பெற்று உழன்றாலும் வந்த வழியே திரும்பி, பேரின்பக் கடலாம் அந்தப் பிரம்மத்தையே அடைகின்றனர். உயிர் வருவழி சென்றிட என்ற சொற்சொடர் உள்முக நோக்கால், ஆரம்பித்த இடத்தையே அடையும் வழியை போதிக்கிறது.

இப்பாடல் நமக்குப் பிரம்ம பதத்தை அடையும் வழியை சற்றே சுலபமாக்குகிறது. பரமபத சோபானம் என்று அந்தக்காலத்தில் ஒரு விளையாட்டு உண்டு. சோபானம் என்றால் படிக்கட்டு என்று பொருள். அந்த விளையாட்டில் பாம்புகளும் ஏணிகளும் இடம் பெறும். இதைச் சரியாக ஆடினால் ஏணிகளில் ஏறி விரைவாகப் பரமபதத்தை அடையலாம். இல்லாவிடில் பாம்புகளின் வாய்பட்டு கீழே தள்ளப்படுவீர்கள். (ஆங்கிலத்தில் இவ்விளையாட்டு Snakes and Ladder) என்று அழைக்கப்படுகிறது. இந்த



உதாரணம், பரமபதத்தை அடைய உதவும் பல்வேறு மார்க்கங்களைக் காட்டும்.

இதற்கு, ரமணர் கூறிய வழி உள்நோக்குப் பார்வை. ஜீவாத்மா தனக்குள்ளே தன்னைப் பார்த்து தன்னைத் தேற்றிக் கொள்ளும் பாதையைச் சுருக்கமாக விளக்குகிறது பிரம்ம சூத்திரம். இதையே ரசமாக எளிய தமிழில் ரமண ஜோதி நமக்குக் காட்டுகிறது. இதைச் சேதனன் வேதாந்தப் பாதையில் பயணிக்கும் போது, ஆரம்ப நிலைகளைக் கடந்து சற்றே தெளிந்த நிலையிலேயே அடைய முடியும்.

பிரம்மசூத்ர யாத்திரையை ரமணப் பாதையில் மேலும் தொடருவோம்.

(தொடரும்)

# கருணைக் கடவுள் கடைக்கண் வேண்டும்!

**ஸ்வாமி இராமதீர்த்தர்**

*கருணைக் கடவுள் கடைக்கண் வேண்டும்*
*அருமை இந்து தேசந் தனக்கே*
*பெருமை யாவும் பண்டு பெற்று*
*உரிய புகழும் உற்ற நன்னாடு*
*சிந்து சாகரத் தீவும் தழுவிட*
*அந்தம் மேவிய இந்து நன்னாடு*
*இமயம் முதலாய்க் குமரி வரையில்*
*அமையப் பெற்ற அகன்ற நிலத்தினில்*
*அமைதி என்றும் தோன்றித் தங்கிட*
*கருணைக் கடவுள் கடைக்கண் வேண்டும்!*

*அன்னை அவளின் மக்கள் யாவரும்*
*அன்பில் ஒன்றி இணைந்திட வேண்டும்*
*கடமைகள் யாவும் கரவிலா தவர்கள்*
*உடனுக் குடனே முடித்திட வேண்டும்*
*சத்திய ஞானம் பெற்றிட வேண்டும்*
*மற்றும் அவர்தம் பண்புகள் யாவும்*
*புத்தம் பிதிதாய் மிளிந்திட வேண்டும்*
*இந்த நன்னாடு உன்னருள் வேண்டி*
*வந்தனை செய்வதைச் செவிமடுத் திடுவாய்*
*உன்னருள் வேண்டும், இறைவா தருவாய்!*

எட்டுத் திக்கிலும் அவள் புகழ் எட்டுக
மற்றவள் ஆன்மா தன்னில் நாட்டுப்
பற்றது சிலிர்த்தெழச் செய்திட வேண்டும்
அன்றொரு காலம் வலிவோ டிருந்தனள்
இன்றவள் பால்நீ இன்னருள் பொழிவாய்
சொல்லருஞ் செயல்கள் ஆற்றிய கண்ணா,
எல்லையில் வீரமும் திறலும் கொண்ட
வில்லுடை கோசலை மகனே, நீயும்
இன்னல் சூழ்ந்த நிலையினில் இருக்கும்
இந்நில மைந்தரைக் கைவிடல் வேண்டாம்
தகவில ராகித் தழைந்தன ராயினும்
பகவனே, இவரைக் கைவிடல் வேண்டாம்
கையறு நிலையினில், கலங்கிடும் நாட்டினை
கடவுள் நீயே காத்திட வேண்டும்.

# *இனிவரும் திருநாட்கள் - 2011-2012*

| | | | |
|---|---|---|---|
| *அக்டோபர்* | *26* | *புதன்* | *தீபாவளி* |
| *நவம்பர்* | *29* | *செவ்வாய்* | *கார்த்திகை உற்சவம் தொடக்கம்* |
| *டிசம்பர்* | *8* | *வியாழன்* | *கார்த்திகை தீபத் திருநாள்* |
| *ஜனவரி* | *9* | *திங்கள்* | *ஸ்ரீ பகவான் 132-வது ஜயந்தி* |
| | *15* | *ஞாயிறு* | *பொங்கல்* |
| *பிப்ரவரி* | *7* | *செவ்வாய்* | *சின்ன ஸ்வாமிகள் ஆராதனை* |
| | *20* | *திங்கள்* | *மகா சிவராத்திரி* |

# ரிபு கீதை

## *தியாகராஜன்*

***அன்னியமோ ரணுவுமில்லா வகண்டத் தின்க***
***ணத்யந்தந் தன்மயமாயிருக்கு நிட்டை***
***தன்னை நினைக் கிவ்வோத்தி னிதாக சொல்வேன்***
***சாற்றியவா தன்மயாமாச் சுகித்தி ருப்பாய்***
***பன்னுமிவை வேதத்துஞ் சாத்தி ரத்தும்***
***பற்றமிக வரிதாகுங் குய்ய மாகும்***
***பின்னுமிவை தேவர்க்கும் யோகி கட்டும்***
***பெற மிகவு மரிதாகும் பிரியமாமே! (26/1)***

***சத்தியசிற் சுககனமாய் சலன மின்றிச்***
***சகலர்க்கு மான்மாவாய்ச் சாந்த மாகி***
***யத்துவித பூரணமாம் பிரமத்தின்க***
***ணலைமனதின் விகற்பங்க ளனைத்துந் தீர்ந்து***
***சித்தமது வேறறவே கலந்தொன் றாகிச்***
***சீரசெல நியாயம் போற் சேர்ந்தி ருக்கை***
***புத்திரனே! தன்மயமா நிட்டை யென்று***
***பூரணமா மறிஞரினாற் புகல வாகும்.***

*(வச மி/1) கேள்வி - திருஷ்டியின் ஸ்வரூபம் என்ன?*

*பக - நாம் எந்த ஸ்திதியில் இருக்கிறோமோ, அப்படித்தான் இருக்கும் நம் திருஷ்டியும். அதாவது ஜாக்ரத் அவஸ்தையில் ஸ்தூல சரீரத்தோடு ஸ்தூல நாம ரூபங்களைப் பார்க்கிறோம். ஸ்வப்னத்தில் சூக்ஷ்ம சரீரத்துடன் பற்பல மனோமயக் கற்பனைகளைப் பார்க்கிறோம், சுழுப்தியில் (ஆழ்ந்த தூக்கத்தில்) உடம்பும் தெரிவதில்லை, மற்றவையும் தெரிவதில்லை. இவற்றைக்*

கடந்த நிலையில் பிரஹ்ம ஸ்வரூபமே! நாம், எல்லாம் நாமே, நமக்கயல் ஒன்றுமில்லை என்று தெரிந்து கொள்கிறோம்.

*(வச மி/6)* கேள்வி - சாக்ஷாத்காரத்தை அடைய எவ்வளவு காலமாகும்?

பக - அதை அடைய வேண்டும். அதற்கு எவ்வளவு காலமாகும் என்றெல்லாம் நினைப்பதே பெருந்தடை. இருப்பது, ஆத்மா ஒன்றே, அதைத் தவிர வேறொன்றும் இல்லை. ஆத்மாவாயிரு, ஆசை, சந்தேகம் எல்லாம் ஒழிந்து போகும். ஜாக்ரத், ஸ்வப்னம், சுழுப்தி அவஸ்தைகளில் எல்லாம் சாக்ஷியாய் இருப்பது ஆத்மா. அவஸ்தைகளெல்லாம் அகங்காரத்திற்கே, அதற்கப்பாலிருப்பது ஆத்மா. தூங்கும்போது ஒன்றுந் தெரியவில்லையே என்றால் தூக்கத்தில் நீ இல்லாது போனாயா? அப்பொழுது 'தூங்குகிறேன்' என்றோ 'ஒன்றும் தெரியவில்லை' என்றோ தோன்றியதா? இப்பொழுது விழித்துக் கொண்ட பிறகல்லவா தூக்கத்தை அறியாமை என்று சொல்கிறாய்? தூக்கத்திலும் விழிப்பிலும் எப்போதும் யாதார்த்தமாய் இருப்பது உணர்வு ஒன்றே. ஜாக்கிரதத்தில் 'உணர்வு' என்பது எது என்று தெரிந்து கொண்டால், எல்லா அவஸ்தைகளிலும் உள்ள உணர்வு ஒன்றே என்பது நன்கு விளங்கும். 'ஒன்றுந் தெரியவில்லை' என்று விழித்த பிறகே நாம் சொல்கிறோம். தூக்கத்தில் எப்படியிருந்தோம் என்பதை உணர்ந்தால், உணர்வின் சொரூபம் நன்கு விளங்கும்.

*(வச மி/116)* கேள்வி - மனோநாசத்தில் தீவிரமாய் ஈடுபடல் ஆபத்தில் கொண்டுபோய் விடுமென்று சிலர் சொல்கிறார்களே?

பக - யாருக்கு ஆபத்து உண்டாகும்? ஆபத்தோ சம்பத்தோ ஆத்மாவுக்கன்னியமாய் வேறெதுதான் இருக்க

முடியும்? இடையறாது நான்-நான் எனச் சுடரும் அகண்ட போத சாகரத்தின் ஒரு சிறு குமிழியே அகங்கார வடிவனாம் ஜீவன். குமிழியும் நீரே. நீருக்கன்னியமாய் அதற்கோர் இருப்புமில்லை. அது உடையுங்காற் கடலுடன் ஒன்றாகிறது, இருக்குங்காலும் அது கடல் நீர் மயமே. சர்வ சாதாரணமான இவ்வுண்மையை உணராது, கணக்கற்ற பற்பல வழிகளிலும் அவற்றின் சிக்கல்களிலும் கருத்தைச் செலுத்திக் குழப்பமுறுகின்றனர், பெரும்பாலும். எத்தனை மதங்கள். சித்தாந்தங்கள், கொள்கைகள் அப்பப்பா! இவை யாவும் முடிவில் எதற்காக? தனதுண்மையை உணர்தற்கே இத்தனை சாதனைகளும், துணைகளும் வேண்டி இருக்கின்றன.

இந்திரியங்களால் உணரப்படும் விஷயங்ளை பிரத்யகஷ மென்கிறோம். இந்திரியங்களின் துணையின்றி நேரே எப்போதும் இடைவிடாது உணரப்படும் ஆத்மாவாம் தன்னைப் போல் அத்தனை பிரத்யக்ஷமானது வேறெது இருக்கிறது கருவி கரணாதிகளின் துணை கொண்டு உணரப்படுவது எப்படி பிரத்யகஷமாகும்? அதனை அப்பிரத்யக்ஷமென்றே சொல்ல வேண்டும். தானாம் உணர்வே பிரத்யக்ஷ ஞானம். இது அனைவர்கும் பொதுவான சாமான்ய அனுபவம். தன்னிருப்பை உணர வேறெதன் சகாயமும் தேவையில்லை.

ஆதியந்தமற்ற அகண்ட பரிபூரணம், தானான தன்மயமாம் தன்னை நான் என்றே உணர்கிறது. நான் என்பதே அதன் முதற் பெயர், முக்கியப் பெயர். ஓமாதியவை கூட அதற்குப் பிற்பட்டவையே. அவ்வகண்ட போதானுபவமே மோக்ஷம். இதற்கு ஆதாரமான சுருதிப் பிரமாணம் அஹம் பிரஹ்மாஸ்மி என்னும் மஹாவாக்கியமே. இத்தனை பிரத்யக்ஷமானதை உணர்த்தித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சுருதி

முடி உணர்த்துவது இதனையே. மஹான்கள் போதிப்பது இதனையே.

*(வச மிமி/163)* கேள்வி - ஆத்மா அகில சாக்ஷியென்பதன் விளக்கத்தை அருள வேண்டுகிறேன்.

பக - அகில மென்னும், ஆத்மா அதன் சாக்ஷியென்னும் கூறுங்கால் துவைத **பா**வத்திற்கு இடமேற்படுகிறது. சூரியன் உலக விவகாரங்கள் அனைத்திற்கும் சாக்ஷி என்பது எப்படியோ அப்படியே தான் ஆத்மா அகில சாக்ஷி என்பதும். ஆத்ம சந்நிதி மாத்திரத்தால் விவகாரங்கள் யாவும் நிகழ்கின்றன. அவ்வளவேயன்றி, ஆத்மா எதனையும் அன்னியமாய் நின்று அறிகின்றதென்று பொருளல்ல. சித்தின் ஸந்நிதியில் அசித்திற்கு இடமேயில்லை.

*(வச மி/244)* அஹம் விருத்தியின் உற்பத்தி ஸ்தானத்தை நாட வேண்டும். அது ஒன்றேதான் நாம் செய்ய வேண்டுவதனைத்தும், அகிலமனைத்தும் இவ்வஹம் விருத்தி ஒன்றைப் பற்றிக் கொண்டே தோன்றுகிறது. அகந்தை ஒழிந்தால், அத்துடன் துயரமனைத்தும் அடியோடு ஒழிகிறது. மூல நாட்டத்தாலேயே போலி அகந்தை முடிவுறும்.

தூக்கத்தின் போது எம்முயற்சியுமின்றியே அகந்தையற்று, அதனால் விளையும் கிலேசம் சற்றுமற்று ஆனந்தமயமாயிருக்கிறோம். விழிப்பு நிலையிலும் அவ்வாறே அகந்தை எழுச்சி அற்று இருந்தால் துன்பமெதுவும் தோன்றாது. ஒரே ஆனந்த மயமாய் இருக்கலாம். விழிப்பு நிலையிலும் அவ்வாறே அகந்தை கிளம்பாதிருந்தால் அதுவே ஆத்மானுபூதி. அதுவே தூங்காது தூங்கலெனப் புகழ் பெறும். முயற்சி எல்லாம், அகந்தைக்கு இடங்கொடாது, மூல நாட்டத்தால் அதை வேரறுப்பதற்காகவே அன்றி யதார்த்த ஞானம் ஆத்மாவை

*அடைவதற்கு அல்ல. ஆத்மா என்றும் எவர்க்கும் இயல்பாய் உள்ளது, முயற்சியால் புதிதாய் அடையப் படுவதல்ல.*

***நின்னையான் உருஎன எண்ணியே நண்ண***
***நிலமிசை மலைஎனும் நிலையினை நீதான்***
***உன்உரு அருஎன உன்னிடின் விண்நோக்கு***
***உறஉலகு அலைதரும் ஒருவனை ஒக்கும்***
***உன்உரு உனல்அற உன்னிட முந்நீர்***
***உறுசர்க்கரை உரு எனஉரு ஓயும்***
***என்னையான் அறிவுற என்உரு வேறுஏது***
***இருந்தனை அருணவான் கிரியென இருந்தோய்!***

***(அருணாசல அஷ்டகம், 3)***

*(கனகம்மாள் - அருணாசல ஸ்துதி பஞ்சகம் - பக்கம் 172)*

*அருணாசலா! என்னைப் போலவே உன்னை உருவமுள்ளவனாக நினைத்து, அடையவேண்டுமென்று நான் அணுகவும், நீயோ இப்பிரபஞ்சத்தில் அருணாசலம் என்னும் மலை வடிவ நிலையில் இருக்கின்றாய். உனது சொரூபம் உருவமற்றதொன்று, தியானிப்பது, எங்கும் நீக்கமற நிறைந்த ஆகாயத்தைக் காண்பதற்கு, உலகு எங்கும் அலைந்து திரிகின்ற ஒருவனுடைய முயற்சிக்கு நிகராகும். உனது உண்மைச் சொரூபத்தை மனதினால் நிலையாமல், எண்ணமற்று உள்ளபடி உணரும் போது, சமுத்திரத்தின் ஆழம் காண்பதற்காகக் கடலில் மூழ்கிய சர்க்கரை பொம்மையின் உருவம் கரைவதுபோல மனம் தன்னுடைய உருவத்தை இழக்கும். இவ்வாறு எனது ஆத்ம சொரூபத்தை நான் விசாரித்து அறியும் போது எனக்கென்று ஒரு தனி உருவம் எது இருக்கிறது. அருணாசலம் என்னும் வானோர் புகழ் மலையாக விளங்கிக் கொண்டு எங்கும் நீயே இருக்கிறாய்!*

*(தொடரும்)*

# சுவர்மறை சோலை

**ஜா. ஜயராமன்**

*ஸனாய் பாரசீக சூஃபி வரலாற்றிலேயே முதல் ஆன்மீக இதிஹாசம் இயற்றிய மகான் ஆவார். அவர் இயற்றிய எல் ஹாதீக் என்ற பாரசீக இதிஹாசத்தினை ஆங்கிலத்தில் வடித்துத் தந்தவர் டேவிட் பென்டல்ப்யூரி. இவ்வாங்கில மொழிப் பெயர்ப்பின் நேர் தமிழாக்கத்தை நாம் சுவர் மறைச் சோலையாக இவ்விதழில் இருந்து காண இருக்கிறோம். இதில் கையாடப் பட்ட, கடினமான மற்றும் புழக்கத்தில் இல்லாத அரிய தமிழ் வார்த்தைகளுக்கு பொருளும் கீழேயே தரப்பட்டுள்ளது.*

*புத்தி பூர்வ மாக அவனை*
*அடைய முயன்று தோற்று - பிர*
*யத்த னத்தை[1] விட்ட உடனே*
*தடையும் எங்கோ போச்சு!*

*அன்பு கொண்(டு) எமக்குத் தானா*
*அறிமுகம் செய்வித் தான் - அவனை*
*அறி உபாயம் வேறுண் டோ? - என்*
*சுட்டறி(வு) எனை உள் வாசல் கிடத்திட*
*இட்டுச் சென்றதவன் உள்இருப்பே!*

*இருக் கினு(ம்), அவனை எப்படி*

---

1 *பிரயத்தனம் - முயற்சி*

*திருக்(கு)உரு[2] உனை நாடாமற்*
*கண்டு கொள்வாய்? நீசொல் லாய்?*
*ஒன்(று)ஆ னது ஒன் றேயாமே*
*இன்(று)அதில் குறைவோ அதிகமோ*
*ஒன்றது குற்றம் இற்றது*
*குற்ற(ம்) உற்றதும் சுட்டறி வாமே!*

*உட்கண் ஆடி சுத்திகரிப்பே*
*உன்ஆன்மா செல்லும் பாதை!*
*பலபட சச்சரவுச் சண்டையதன்*
*கபட அச்ரத்தைத் துருவை[3] நீக்கா!*

*பளிங்கின் சுத்தி நிச்சய புத்தி*
*களங்கமிலா ஆபூர்ண[4] பக்தி*

*அடைவாய் விடுதலை! கடை வாய் மண்ணின்*
*ஆப்தம் விடுவாய்! நீயே பூண்ட*
*தடைவாய் விலங்கைத் தகைப்பாய்!*

*தேகம் இருளாம் தெருளாம்[5] இதயம்*
*ஆகம் உரமண்[6]! உளம் பூஞ்சோலை!*

---

2 திருக்(கு)உரு - காண்பானாம் அகந்தையின் எழுமிடம்

3 கபடஅச்சரத்தைத் துரு - சந்தேகமெனும் வஞ்சக அழுக்கு

4 ஆபூர்ணம் - சகஜமாகவே அசைவற்ற அருளூற்ற நிறைவுற்றது

5 தெருள் - தெளிவு, அறிவு

6 ஆகம் உரமண் - உடலின் கதி மண்ணில் மறைந்து உரமாவதே

*தன்னைத் தானே அறியாது - மற்(று)*
*என்னைத் தானோ இவனறிவன்?*
*கையாய் காலாய் தனைஓர்[7] இவன்என்*
*ஐயா போயும் போய்த் தேர்வன்[8]?*

*ஞானி பிடிக்கும்[9] தாண்டி இருக்கும்*
*அதைமூடா நீஅறியத் தகுமோ?*
*விண்டு விளக்கிட நீயும்*
*கண்டு களிப்பாய் சாரம் - அதுவரை*
*ச்ரத்தைக்(கு) ஈடா நீயும்?*

---

7 *தனைஓர் இவன் - தன்னை (உடலாய்) அறியும் இவ் அறிவிலி*

8 *என்னையா - என்னத்தைத் தான் ஐயா! (அல்லது) என் தலைவனையா போயும் போயும் அறியக் கூடியவன்?*

9 *ஞானி பிடிக்கும் - ஞானியின் கையின் பிடிப்புக்கும்*

## *கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2011*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *நவம்பர் 10* | *வியாழன்* | *நள்ளிரவு 12.15* | *11* | *வெள்ளி* | *அதிகாலை 02.10* |
| *டிசம்பர் 9* | *வெள்ளி* | *மாலை 06.45* | *10* | *சனி* | *இரவு 08.15* |
| *ஜனவரி 8* | *ஞாயிறு* | *பகல் 12.42* | *9* | *திங்கள்* | *பகல் 1.03* |
| *பிப்ரவரி 7* | *செவ்வாய்* | *காலை 4.19* | *8* | *புதன்* | *காலை 3.38* |

# சிவானந்த லஹரி

## கௌதமன்

***(71)***

***ஆரூட$^{4}$ ப$^{4}$க்தி கு$^{3}$ண குஞ்சித பா$^{4}$வசாப***
***யுக்தை: சிவஸ்மரண பா$^{3}$ணக$^{3}$ணை ரம்கை$^{4}$:।***
***நிர்ஜி$^{3}$த்ய கில்பி$^{3}$ஶரிபூன் விஜ$^{3}$யீ***
***ஸுதீ$^{4}$ந்த்$^{3}$ரஸ் ஸாநந்த$^{3}$ மாவஹதி ஸுஸ்தி$^{2}$ர ராஜ$^{3}$லக்ஷ்மீம்।।***

*எவன் சிறந்த பக்தியென்னும் நாண் கயிற்றினால் வளைக்கப்பட்ட பாவனை என்ற வில்லில் தொடுக்கப்பட்ட வீணாகாத சிவத்தியானம் என்ற அம்புகளால் தீவினைகளென்கிற பகைவர்களை அழித்து வெற்றி கொள்கிறானோ, அவனே சிறந்த அறிவாளியாகிறான்; என்றும் நிலைத்த (மோக்ஷ) ஸாம்ராஜ்ய ஸம்பத்தை அடைகிறான்.*

***(72)***

***த்4யானாஞ்ஜ$^{3}$னேன ஸமவேக்ஷ்ய தம: ப்ரதே$^{3}$ஶம்***
***பி4த்வா மஹாப$^{3}$லிபி$^{4}$ ரீஶ்வரநாம மந்த்ரை:***
***தி3வ்யாஶ்ரிதம் பு$^{4}$ஜ$^{3}$க$^{3}$பூ$^{4}$ஷண முத்$^{3}$வஹந்தி***
***யே பாத$^{3}$ பத்$^{3}$ம மிஹ தே ஶிவ தே க்ருதார்தா$^{2}$:***

*எவர்கள் தியானமென்னும் மையால் (புதையலிடத்தை) பரிசோதித்து அறிந்துகொண்டு, அதை மறைக்கும் அஞ்ஞானமென்னும் இருளையகற்றி, ஈச்வரனது நாமங்களாகிய மந்திரம் ஜபித்து, அதையே சிறந்த பலியாகத் தந்து, தேவர்களால் தஞ்சம் புகப்பெற்றதும், ஸர்வாபரணங்கள் கொண்டதுமான உங்களது திருவடி*

என்ற பத்மநிதியை வெளிக் கொண்டு வருகின்றனரோ அவர்கள் தான் இவ்வுலகில் வாழ்க்கைப் பயனைப் பெற்றவராகின்றனர், (மை போட்டு புதையல் உள்ள இடத்தை அறிந்து, பிறகு பலி கொடுத்துப் புதையலை வெளிக் கொண்டு வருவது வழக்கம்.)

**(73)**

***பூ4தா3ரதா-முத3வஹத்3 யத3பேக்ஷயா ஸ்ரீ:***
***பூ4த3ார ஏவ கிமதஸ் ஸுமதே லப4ஸ்வ।***
***கேதா3ர மாகலித முக்தி மஹௌஷதீ4 னாம்***
***பாதா3ரவிந்த3 ப4ஜனம் பரமேஶ்வரஸ்ய।।***

நன்னெஞ்சே! எதை விரும்பித் திருமகளையும், பூதேவியையும் மனைவியராகக் கொண்ட திருமால் வராஹ உருக்கொண்டாரோ, முக்தியெனும் சிறந்த மூலிகையின் விளைநிலமாக எது உள்ளதோ, அந்தப் பரமேச்வரனது பாதகமல சேவையைப் பெறுவாயாக! அதை விட உனக்கு மேலானது எது?

**(74)**

***ஆஶா பாஶ க்லேஶ து3ர்வாஸனா3தி***
***பே4தோ3த்3யுக்தைர் தி3வ்யக3ந்தை4 ரமந்தை3:।***
***ஆஶாஶாடீகஸ்ய பாதா3ரவிந்த3ம்***
***சேத: பேடீம் வாஸிதாம் மே தனோது।।***

எனது மனமாகிய பெட்டி ஆசாபாசங்களால் கெட்ட வாஸனைகள் நிரம்பியுள்ளது. அதைத் தங்களது திருவடித் தாமரையினுடைய சிறந்த நறுமணங்கள் மணமுள்ளதாகச் செய்யட்டும்.

**(75)**

***கல்யாணினாம் ஸரஸசித்ர க3திம் ஸவேக3ம்***
***ஸர்வேங்கி3 தஜ்ஞ மனக4ம் த்4ருவலக்ஷணாட்4யம்***
***சேதஸ்துரங்க3 மதி4 ருஹ்ய சர ஸ்மராரே***
***நேதஸ் ஸம்ஸ்தஜக3தாம் வ்ருஷபா4 தி4ரூட5***

*தலைவா! வ்ருஷபத்தில் அமர்ந்தவரே! காமனையழிப்பவரே! எனது மனமாகிய குதிரையில் அமர்ந்து சஞ்சரிப்பீராக, அக்குதிரை மங்கள வடிவுடையது - அழகிய பற்பலவிதமான நடையுள்ளது - வேகமுள்ளது - நோக்கமறிந்து பழகும் அறிவுடையது- குற்றமற்றது. அத்ருஷ்டரேகை, சுழியென்னும் சுபலக்ஷணங்களும் உடையது.*

**(76)**

***ப4க்திர் மஹேஶ பத3 புஷ்கர மாவஸந்தீ***
***காதம்பி3னீவ குருதே பரிதோஷவர்ஷம்।***
***ஸம்பூரிதோ ப4வதி யஸ்ய மனஸ்தடாகஸ்-***
***தஜ்3ஜ3ன்ம ஸஸ்ய மகி2லம் ஸப2லஞ்ச நான்யத்॥***

*எவருடைய மனமாகிய குளம், மஹேசனது திருவடிகளாகிய வானத்தில் விளங்கும் பக்தியெனும் மேகக்கூட்டம் பொழியும் பேரின்பமென்னும் மழையால் நிரப்பப்படுகிறதோ, அவரது பிறவியாகிய பயிர் வீண் போகாது முழுப்பயனை அடைந்ததாகும். மற்ற எதுவும் அல்ல.*

**(77)**

***பு3த்3தி4: ஸ்தி2ரா ப4விது மீஶ்வர பாதபத்3ம-***
***ஸக்தா வதூ4ர் விரஹிணீவ ஸதா3 ஸ்மரந்தீ।***
***ஸத்3பா4வனா ஸ்மரண த3ர்ஶன கீர்த்தனாதி3***
***ஸம்மோஹிதேவ ஶிவமந்த்ர ஜ3பேன விந்தே॥***

*பரமனது திருவடித்தாமரையில் பற்றுக் கொண்ட எனது புத்தி என்கிற கன்னி அவைகளில் நிலை பெறுவதற்காக எப்பொழுதும் அத்திருவடியையே நினைத்தும், அதைப்பற்றிய கற்பனை செய்தும், மானஸீகமாகக் கண்டு கொண்டும், எண்ணிக் கொண்டும், புகழ்ந்து பாடிக் கொண்டும், சிவமந்திர ஜபத்தால் உணர்ச்சியிழந்தும், பர்த்தாவின் பிறிவாற்றாமையால் வாடி நிற்கும் விரஹிணியைப் போல கவலைப்படுகிறது.*

**(78)**

***ஸது3 பசார விதி4 ஷ்வனுபோ3 தி4தாம்***
***ஸவிநயாம் ஸுஹ்ருத3யம் ஸது3பாஶ்ரிதாம்।***
***மம ஸமுத்3த4ர பு3த்3தி4 மிமாம் ப்ரபோ4***
***வரகு3ணேன நவோட4 வதூ4மிவ।।***

*ஆண்டவனே! எனது புத்தி என்ற கன்னி பெரியோர் பணிவிடையில் நன்கு பொதிக்கப்பட்டு, அடக்கமுள்ளவளாக, நல்லிதயம் படைத்தவளாக, நற்காரியங்களில் நாட்டமுடையவளாக உள்ளவள். புதிதாக விவாஹமானவளை மணாளன் தனது குணத்தால் மகிழ்விப்பது போல், எனது புத்தி என்கிற கன்னிகையைக் கைதூக்கி விடுவீராக!*

**(79)**

***நித்யம் யோகி3மனஸ் ஸரோஜ3த3ல ஸஞ்சார க்ஷமஸ்த்வத்க்ரம:***
***ஶம்போ4 தேன கத2ம் கடோ2ரயமராட் வக்ஷ: - கவாடக்ஷதி:।***
***அத்யந்தம் ம்ருது3லம் த்வத3ங்க்4ரியுக3லம் ஹா மே மனச்சிந்தயத்-***
***யேதல்லாலோசன கோ3சரம் குருவிபோ4 ஹஸ்தேன ஸம்வாஹயே।।***

*ஸம்போ! தங்களுடைய மிக மிக மென்மையான அடிவைப்பு, யோகிகளது மனமாகிய தாமரை இதழ்களின் மேலேயே எப்போதும் ஸஞ்சரிக்கத் தக்கது. அதைக் கொண்டு மிக முரடான யமதருமராஜனது கதவு போன்ற மார்பை எங்ஙனம் பிளந்தீர்? ஐயோ! (இதை நினைத்து) என் மனம் வியாகுலப் படுகிறது. விபுவே! அவ்வடியை எனது கண்களுக்குத் தோன்றச் செய்யும். என் கைகளால் பிடித்து விடுகிறேன்.*

**(80)**

***ஏஷ்யத்யேஷ ஜ3னிம் மனோ(அ)ஸ்ய கடி2னம் தஸ்மிந் நடானீதிமத்3***
***ரக்ஷாயை கி3ரிஸீம்னி கோமலபத3 ந்யாஸ: புராப்4யாஸித:।***



***நோ சேத்$^3$தி$^3$வ்ய க்$^3$ருஹாந்தரேஷு ஸுமனஸ் தல்பேஷு வேத்$^3$யாதிஷு***
***ப்ராயஸ்ஸத்ஸு ஶிலாதலேஷு நடனம் சம்போ கிமர்த்தம் தவ।।***

*சம்போ! தாங்கள் நடனம் புரிவதற்கு தேவர் மனைகள் இருக்கின்றன. பூக்களாலான படுக்கைகள் உள்ளன, மேடைகளுமுள்ளன. அங்ஙனமிருக்க கற்பாறைகள் நிரம்பிய மலையில் நடனம் புரிவது எக்காரணத்துக்காக? இந்த ஜீவன் (அடியேன்) பிறப்பான், இவனது மனமோ மிகக் கரடு முரடாயிருக்கும். அதில் நர்த்தனமாட வேண்டி வரும் என (நீ) கருதி, என்னைக் காக்கவே இவ்விதமாக மலைப்பிரதேசத்தில் உன் மிருதுவான பாதத்தின் ஆடல் முன்கூட்டியே அப்பியாஸிக்கப்பட்டது போலும்!*

# அருணை விஜய விழா

**ஆகுரா**

*பகவான் ரமணர் தன் இளமைப் பருவத்தில் தனக்குள் உண்டான அருணாசல ஸ்புரணத்தை, அதனால் தனக் கேற்பட்ட மனநிலையை என்னவென்று அறியாதவராக இருந்தார். தனது உறவினர் ஒருவர் அருணாசலம் என்பது திருவண்ணாமலையே என அறிவுறுத்த அக்கணம் முதல் அருணாசலத்தை அடைவதையே ஒரே நோக்கமாகக் கொண்டு திருவண்ணாமலையை வந்தடைந்தார். ஒரு சிறுவன் தனது தந்தையின் மடியில் அமரும்பொழுது தனது அனைத்துக் கவலைகளையும் பொறுப்புகளையும் களைந்து ஆழ்ந்த ஆனந்தத்தில் மிகவும் மனம் சிறகாய்ப் பறந்திட பாரம் இறங்கிய நிலையில் அமர்வதுபோல் 'அப்பனை வந்தடைந்தேன் அருணாசலா!' என்று தனது அனைத்து உடைமைகளையும், உள்ளத்தையும் ஒப்புவித்து தனது வாழ்நாள் முழுவதும் அருணாசலத்தின்பால் ஈர்க்கப்பட்டு அங்கேயே அமர்ந்து விட்டார். இதனை பகவான் தனது அருணாசல அஷ்டகத்தில், 'அறிவினை மருளுறுத்து அருகினில் ஈர்க்க அருகுஉறும் அமயம் இதை அசலமாக் கண்டேன்' என்று தனது அனுபவமாகக் கூறுகிறார்.*

*இதனையே அருணாசல பதிகத்திலும்*

***பார்த்தனன் புதுமை உயிர்வலி காந்த***
***பருவதம் ஒருதரம் இதனை***
***ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி***
***ஒரு தனது அபிமுகமாக***
***ஈர்த்து அதைத் தன்போல் அசலமாச் செய்து அவ்***
***இன் உயிர் பலி கொளும் இஃது என்***

**ஓர்த்து உய்மின் உயிர்காள் உளம் அதில் ஒளிர்இவ்**
**உயிர்க்கொலி அருணமா கிரியே.**

இவ்வாறாக அருணாசலன் தன் பாலகன் ரமணர் ஒருவரைத் தன்பால் ஈர்த்து, அம்மைந்தன் ரமணரின் மூலம் பலகோடி மக்களை, பன்னாட்டவரை, ஈர்த்துள்ளான். பகவானின் அருணாசல விஜயம் என்பது அனைத்துத் தரப்பு மக்களின் அருணாசல விஜயத்திற்கு வழிகோலியது. இத்தகைய ஒரு மகத்தான நிகழ்ச்சியை உலகம் முழுவதும் உள்ள ரமண அன்பர்கள் குதூகலத்துடன் கொண்டாடி மகிழ்கின்றனர்.

கனடா நாட்டில் அமைந்துள்ள நோவா ஸ்கோஷியா என்னும் மாநகரில் அருணாசல ஆச்ரமத்தில் கொண்டாடப்பெற்ற அருணை விஜய விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன். பகவான் ரமணரின் அருணை விஜயம் என்ற அந்த அர்த்தமுள்ள ஆனந்த நிகழ்வு எப்படியெல்லாம் கொண்டாடப்படுகிறது. விழாவிற்குச் சில மாதங்களுக்கு முன்னரே திரு. டென்னிஸ் அவர்கள் Nova Scotia சென்று தங்கி விடுகிறார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் துவங்கி விடுகின்றன. இங்குள்ள சிறிய பண்ணையில் காய்கறிகளைப் பயிரிடுகிறார். விழாக் காலங்களில் இங்குத் தங்கும் அன்பர்களுக்கு அவை பெரிதும் பயன்படுகின்றன. இதில் கத்தரிக்காய் செடியும் அடக்கம். ஒரு சிறிய தொட்டியில் ஒரே ஒரு கத்தரிச்செடி வளர்கிறது. அதில் ஏழெட்டுக் காய்கள் (வாழைக்காய் அளவில்) காய்த்துத் தொங்குகின்றன.

இப்பண்ணையின் தாவரங்களைக் காணும்பொழுது, அவை பூத்துக் காய்த்து மலர்ச்சியுடன் அருணை விஜய விழாவில் பங்குகொள்ளத் துடிப்பது போன்றே காண்கிறது. சுற்றிலும் பச்சைப்புல் படுகை பல ஏக்கர்களில் படர்ந்து,

ஆங்காங்கே ஆப்பிள் மரங்கள் மகிழ்ச்சியுடன் ஆப்பிள்களை அள்ளித் தெளித்து மகிழ்கின்றன.

எங்கேயிருந்தோ பறந்து வரும் ஒரு சிறிய குருவி இளைப்பாறி மகிழ டென்னிஸ் அவர்கள் ஒரு கூண்டு போன்ற அமைப்பில் சர்க்கரை நீரை நிரப்பி வைத்துள்ளார். அக்குருவி தன் நீண்ட மூக்கை அதில் நுழைத்து தேனைப் பருகுவதுபோல் அந்த சர்க்கரை நீரைப் பருகி மகிழ்கிறது. பலதரப்பட்ட பறவைகள் வந்து அமரவும் உண்ணவும் கூண்டு அமைத்துத் தானியங்களைப் போடுகிறார்கள். இது ஒருவகையான நாராயண சேவைபோல் தினமும் நடக்கிறது.

கனடா, அமெரிக்கா எனப் பல நாடுகளில் இருந்து ரமண அன்பர்கள் விழாவிற்கு ஒரு வாரம் முன்பாக வந்து குவிகின்றனர். அவர்கள் தங்குவதற்கான அறைகள், உணவு அனைத்தும் வழங்கப்படுகிறது. அப்படி வரும் அன்பர்கள் தினமும் அதிகாலை எழுந்து பாராயணம் செய்துவிட்டு அன்றைய சமையலுக்குப் பண்ணையிலிருந்து புதிய காய்கறிகளைப் பறித்து வந்து சமைக்கிறார்கள். பகலில் தியானம் மற்றும் தங்களால் இயன்ற வகையில் ஆச்ரமத்தின் மராமத்து வேலைகளைச் செய்கிறார்கள்.

விழா நெருங்க நெருங்க அந்த ஆச்ரமமே களைகட்டுகிறது. எத்தனை வகையான மனிதர்கள்! வெவ்வேறு நாட்டினைச் சார்ந்தவர்களாக இருப்பினும், பகவான் ரமணரின் அன்பர்கள் என்னும் ஓர் பிணைப்பினால் கட்டுண்டு மகிழ்ச்சியுடன் உலாவருவது நம்மை அளப்பறிய ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது.

விழாவிற்கு முதல் நாளே நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் அன்பர்கள் கூடி அடுத்த நாளுக்கான அருணை விஜய விழாப் பணிகளில் ஆத்மார்த்தமாக ஈடுபடுகின்றனர். தாங்கள் செய்து

கொண்ட உணவு வகைகள் அல்லது தாங்கள் அறிந்த வகையில் புதிய உணவுகளும் பலதரப்பட்ட சுவைகளுடன் தயாரிக்கின்றனர்.

இங்குள்ள தாவரங்கள், பறவைகள், மனிதர்கள், விலங்குகள் என அனைவரும் சேர்ந்து உற்சாகத்துடன் கொண்டாடுவது இந்த விஜய விழா. பகவான் ரமணர் அருணை ஈசனை அடுத்தணைந்த இந்தநாளில் நாம் அனைவரும் உலகின் பல பாகங்களிலிருந்தும் ஈர்க்கப் பட்டுள்ளோம்.

**'அருணைஈசனை எடுத்தணைந்திடும்**
**அன்பன் என்குரு நாயகன்'**

அல்லவா நமது ரமணர்.

# ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| *ஸ்ரீமதி. புவனேஸ்வரி பார்த்தசாரதி, சென்னை* | *3000* |
| *ஸ்ரீமதி. A. செல்லம், சென்னை 4* | *1001* |
| *திரு. T. கிருஷ்ணமூர்த்தி, சென்னை 28* | *1001* |
| *திரு. R. பாஸ்கரன், சென்னை 33* | *1000* |
| *திரு. V. பசுபதி, சென்னை 20* | *1000* |
| *திரு. N.P. ஹரன், சென்னை 28* | *1000* |
| *திரு. அஷ்வின்குமார், சென்னை* | *1000* |
| *திரு. S. கணேசன், சென்னை* | *750* |
| *ஸ்ரீமதி. சரஸ்வதி வைத்யநாதன், சென்னை* | *500* |
| *திரு. S.G. சுப்ரமணியம், சென்னை* | *500* |
| *திரு. N. நடராஜன், சென்னை* | *500* |
| *ஸ்ரீமதி. ஹரிபிரியா, சென்னை* | *500* |

# அற்றை நாள் அன்பர்கள்

## *சிவகங்கை குப்புஸ்வாமி அய்யர்*

*சிவகங்கை திரு. குப்புஸ்வாமி அய்யர் அவர்கள் 1938-1950 வரை பகவான் ஸ்ரீரமண மஹரிஷி அவர்களுடன் திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தில் தங்கியிருந்து அவருக்கு சேவை செய்யும் பேறு பெற்றார். இறுதியில் பகவான் ரமண மஹரிஷி பரமாத்மாவுடன் இணைந்த பிறகு சிவகங்கைக்கு திரும்பினார். 1967ஆம் வருடம் சிவகங்கையில் சிவனடி சேர்ந்தார்.*

திரு. குப்புஸ்வாமி அய்யர் அவர்கள் தனது உத்யோக சம்பந்தமாக ஓவர்சீர் என்ற பொறுப்பில் வேலை பார்த்து வந்தார். பின்னர் மகாத்மா காந்தியின் சுதந்திர எழுச்சியால் ஈர்க்கப்பட்டு, இராட்டை சர்க்காவை தானே மரத்தில் உருவாக்கி பலருக்கும் செய்து கொடுத்தார். மேலும் அதில் நூல் நூற்கவும் பயின்று அனைவராலும் சர்க்கா குப்புசாமி என அன்புடன் அழைக்கப்பட்டார். பாரத சுதந்திரத்திற்குப் பின் பகவான் ரமண மகரிஷியின் பாதார விந்தங்களில் சரணடைந்து ஆத்ம விசாரணையிலும் தவ யோகத்திலும் முழுமுயற்சியுடன் ஈடுபட்டார்.

பகவான் ரமணரின் தாயார் சமாதிக்கு மேல் மாத்ரு பூதேஸ்வரர் சந்நிதி கட்டும் பொழுது கட்டிட வேலைகளையும், தச்சு வேலைகளையும் குப்புஸ்வாமி அய்யர் அவர்கள் ரமணரின் ஆணைப்படி மேற்பார்வை பார்த்து வந்தார். பகவான் ரமண மகரிஷிகள் அவரை அன்புடன் மேஸ்திரி என அழைப்பார். பணப்



*சிவகங்கை ஸ்ரீ குப்புஸ்வாமி ஐயர்*

பட்டுவாடாக்களை மிகவும் நேர்த்தியாக செய்ததோடு பதிவேட்டில் பதிவு செய்தும் வந்தார்.

மேலும் ரமணாஸ்ரமத்தில் தங்கியிருந்த 12 வருடங்களில் ரமண பகவான் அவர்கள் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் இயற்றிய ஸ்லோகங்கள், பாடல்கள், கவிதைகள் எல்லாவற்றையும் சின்னஞ்சிறு நோட்டுப் புத்தகங்களில் அச்சுக் கோர்த்தார் போல் எழுதி அனைவருக்கும் விநியோகம் செய்தார். அவருடைய உருவப் படம் ஆஸ்ரம உணவு சாலையில் வைக்கப்பட்டுள்ளது.


# கருணையால் என்னை ஆண்டவன்

**சரோஜா கிருஷ்ணன்**

பகவான் விரூபாக்ஷ குகையில் இருந்த காலத்தில் என்னுடைய தாய் வழிப் பாட்டனார் அரசாங்க மருத்துவ அதிகாரியாக திருவண்ணாமலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பகவானைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரைத் தரிசித்து, அவரிடம் ஆழ்ந்த பக்தியும் அன்பும் கொண்டிருந்தார். திருவண்ணாமலையில் வசித்த காலத்தில் ஒரு நாள்கூட விடாமல் பகவானைத் தரிசித்து வருவார். பகவானுக்குத் தினமும் பால் கொண்டு போய் கொடுப்பது வழக்கம். இது காலையில் அவர் செய்யும் முதல் வேலை.

அவர் பணியாற்றிய காலத்தில் திருவண்ணாமலையில் பிளேக் நோய் பரவிய போது இங்குள்ளவர்களை எல்லாம் வெளியேற்றி வேறு இடங்களில் குடியேற வந்தனர். ஆனால் பகவான் பச்சையம்மன் கோயிலில் பத்திரமாக இருக்கலாம் என்று கூறி யாருடைய இடையூறும் இல்லாமல் பச்சையம்மன் கோயிலிலேயே வசிக்க ஏற்பாடு செய்தார்.

இதைத் தவிர அப்போது பகவான் பிக்ஷைக்காக வெளியே செல்லும் வழக்கம் உண்டு. என்னுடைய பாட்டி வெளியே பகவானுக்காகத் தயாராக அன்னத்தை வைத்துக் கொண்டு காத்திருப்பாள். வெளியே பகவான் பிக்ஷைக்காக கையைத் தட்டும் சப்தம் கேட்டவுடன் சற்றும் தாமதியாமல் கொண்டுபோய் கையில் அன்னத்தை யிடுவாள். சிறிதாவது தாமதித்தால் பகவான் அடுத்த வீட்டிற்குச் சென்று



விடுவார். இப்படி இவர்கள் செய்த நற்கர்மத்தால் இவர்களுடைய சந்ததியினர்கள் இன்றும் ஆச்ரமத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

ரமணாச்ரமத்தின் ஆதிகாலத்தில் பணத் தட்டுப்பாடு ஏற்படும் போதெல்லாம் தண்டபாணி சுவாமியும் ராமசாமி பிள்ளையும் அப்போது புதுக்கோட்டையில் இருந்த என் பாட்டனாரைச் சந்தித்து நிலைமையை விளக்குவார்கள். ஒரு சமயம் தன்னுடைய கைவசம் இருந்த 3000 ரூபாயை

கொடுத்துத் தனக்குப் பரிச்சியமான நகரத்தார்களுக்கும் மற்ற அரண்மனை உத்தியோகஸ்தர்களுக்கும் நிதி தரும்படி சீட்டு எழுதிக் கொடுத்து பரிந்துரைத்தார். இந்நிதியைக் கொண்டு சில ஆச்ரம நிர்மாணப் பணிகள் செய்தனர். உதாரணமாக சமாதிக்கு அருகே ஓடிக் கொண்டிருந்த ஓடையைப் பிரித்து எல்லையில் கல்சுவரைக் கட்டி ஆச்ரமத்திற்குத் தேவையான சிறிய கட்டிடங்களுக்கும் அஸ்திவாரம் எழுப்பினார்கள்.

ஒருசமயம் என்னுடைய பாட்டனார் தன்னுடைய மகளையும் (என் அம்மாவையும்) என்னையும் என் அண்ணாவையும் கூட்டிக் கொண்டு பகவான் தரிசனத்திற்காகப் பாத்திரம் நிறைய இனிப்புப் பலகாரங்களுடன் சென்றார். அப்போது எனக்கு ஏற்பட்ட தொடர்பு தொடர்ந்து நீடிக்கிறது. பகவான் சிறு குழந்தைகளைக் கண்டால் தானும் குழந்தையாகி விடுவார். சில சமயம் பக்தர்கள் தங்களது கைக்குழந்தைகளை பகவான் கையில் கொடுக்க அவர் தன் மடியில் வைத்து விளையாட்டுக் காட்டி பின் தாயிடம் கொடுப்பார். குழந்தைகளைக் கண்டாலேயே பகவான் முகத்தில் ஒரு தனிப் பிரகாசமும் மலர்ந்த சிரிப்பும் தோன்றும். கைத்தடியால் லேசாக தட்டிக் கொடுத்தோ அல்லது லேசாக கைகளால் செல்லமாக வருடி விட்டோதான் போவார். அதற்காகவே சிலர் பகவான் வரும் வழியில் குழந்தைகளை வைத்துக் கொண்டு நிற்பர்.

அப்போதெல்லாம் அநேகமாக ஒவ்வொரு நாளும் யாராவது பக்தர்கள் பிற்பகலில் ஏதாவது பக்ஷணமோ பழமோ பகவானுக்குக் கொண்டு வந்து கொடுப்பார்கள். உடனுக்குடன் அது எல்லோருக்கும் விநியோகிக்கப்படும். எங்களைப் போன்ற குழந்தைகளுக்கெல்லாம் அது மகிழ்ச்சியை அளிக்கும். வெளிநாட்டினர் விதவிதமான

ஆடைகளில் வருவதையும், நம் நாட்டவரே விதவிதமான அலங்காரத்துடன் வருவதையும் வேடிக்கை பார்ப்போம். நடுநடுவே பகவான் யாரைப் பார்க்கிறார், என்ன சொல்கிறார் என்று பார்ப்பேனே தவிர, பகவானின் பெருமையோ, அவரது உபதேசமோ என் மனதில் அப்போது பதியவில்லை.

பிற்காலத்தில் என்னுடைய சித்தப்பா (அதாவது என் அம்மாவின் தங்கையின் கணவர்) சேலம் ராஜகோபாலய்யர் பகவானுடைய தொண்டர்களில் ஒருவராக இருந்தார். இவர் குற்றாலத்தில் இருந்து வந்த பெரிய சாதுவான நாராயண சிவம் என்பவருக்குத் தொண்டாற்றிய புண்ணியத்தால் பகவானுக்குச் சேவை செய்யும் பாக்கியத்தைப் பெற்றார். அப்போது ஆச்ரமத்தில் நடப்பவைகளை உடனுக்குடன் வீட்டிற்கு வந்து எங்களுக்குச் சொல்வார். ஒருநாள் காலை சித்தப்பா வீட்டிற்கு ஓடி வந்து இரண்டனாவை எடுத்துக் கொண்டு திரும்பிச் சென்றார். சாயங்காலம் வந்துதான் நடந்ததைக் கூறினார். பகவான் அன்று காலை மலைக்குப் போய்விட்டு வரும் வழியில் திடீரென்று ஒரு புறா பகவான் காலடியில் விழுந்தது. பகவான் அதைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு ஆதரவுடன் மெதுவாக தடவிக் கொடுத்துக் கொண்டு, புறா எங்கிருந்து வந்து விழுந்தது என்று பார்த்தார். சற்றுத் தொலைவில் ஒரு பையன் தயங்கி நின்று கொண்டிருந்தான். அவனது பசிக்கு இது ஆகாரம், இரண்டனா இருந்தால் அவன் பசி தீர்ந்து விடும் என்று புறாவைத் தடவிக் கொண்டே பகவான் கூறினார். பக்கத்தில் நின்றிருந்த என் சித்தப்பா இதைக் கேட்டு ஆபீஸுக்குச் சென்று அங்கே கடனாக இரண்டனா வாங்கிக் கொண்டுபோய் அந்தப் பையனிடம் கொடுத்து அவனை அனுப்பிவிட்டுப் பிறகு வீட்டிற்கு வந்து இரண்டனாவை எடுத்துக் கொண்டுபோய் ஆபீஸில் கொடுத்தார்.

பகவான் கையில் இருந்த புறா மயங்கிய நிலையில் இருந்தது. பச்சை திராட்சையை இதன் தலையில் பிழிந்து விட்டால் இது சரியாகிவிடும் என்று பகவான் கூறிக் கொண்டிருந்தபோது வெளியில் இருந்த பக்தர் ஒருவர் சில கொத்து, பச்சை திராட்சையுடன் ஹாலுக்குள்ளே நுழைந்தார்.

அடேடே, சொல்லிக் கொண்டிருந்தபோதே திராட்சை வந்துவிட்டதே என்று ஆச்சரியத்துடன் கூறி புறாவின் தலையில் திராட்சை ரசத்தைப் பிழிந்தார். சற்று நேரத்தில் புறா தலையைத் தூக்கிப் பார்த்துத் தத்தித் தத்தி நடக்க ஆரம்பித்தது. பிறகு வெளியே பறந்து சென்று விட்டது. இந்த வைத்தியத்தை எல்லாம் பகவான் எங்கே கற்றுக் கொண்டாரோ?

சேலத்தில் ராஜகோபாலய்யர் ஒரு கூடை நிறைய விளாம்பழங்களை வாங்கிக் கொண்டு பகவானுக்கு அளிக்க திருவண்ணாமலைக்கு வந்தார். அவர் ஹாலில் பழங்களுடன் நுழைந்தவுடன் பகவான், அடேடே, விளாம்பழம் தேவை. எங்கு கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இதோ சேலத்தில் இருந்து வந்து விட்டது என்றார். எதற்காக விளாம்பழம் தேவை என்று எனக்கு இப்போது நினைவில்லை.

ஒருநாள் வேயுறு தோளி பங்கன் என்ற கோளறு பதிகத்தைப் பற்றிப் பேச்சு வந்தது. பாண்டியன் சபைக்கு போவது ஆபத்து. இன்று நாள் நன்றாக இல்லை, என்று அப்பர் சம்பந்தரை தடுத்த போது, சம்பந்தர் பாடிய பதிகம் இது. இப்பதிகத்தின் இறுதியில் ஆன சொன்மாலை யோதும் அடியார்கள் வானில் அரசாள்வர், ஆணை நமதே என்ற வரிகளை சொல்லியபடி பகவான் தலைநிமிர்த்தி, நெஞ்சை நிமிர்த்தி, தன்னுடைய மார்பை வலது கையால் தட்டிக் காண்பித்த கம்பீரம் அன்று சம்பந்தர் கூறியதுபோல்

இருந்தது. பகவான்தான் ஆதிசங்கரர், சம்பந்தர் என்று அநேகர் நினைத்தனர். அதை உறுதி படுத்தத்தான் ஆணை நமதே என்று தன்னுடைய மார்பில் தட்டிக் காண்பித்தாரோ? இதைப்போலவே திருப்புகழில் வரும் நீலங்கொள் மேகத்தின் மயில் என்ற பாடலின் கடைசியில் வரும் நானென்று மார்தட்டும் பெருமாளே என்ற வரிகளைப் படிக்கும்போதும் பகவான் தனது மார்பைத் தட்டிக் காண்பிப்பார். பகவானை முருகனாக பாவித்தவர் களுக்கு இது ஆதரவு.

மனநிலை பாதிப்புற்றவர்கள், பகவான் சந்நிதியில் குணமாகலாம் என்று நம்பி உறவினர்கள் அழைத்து வருவதுண்டு. சாதாரணமாக எல்லோரிடமும் கருணை காட்டும் பகவான், மனநிலை பாதித்தவர்களிடம் மட்டும் சற்றுக் கடுமையாக இருப்பார். ஆனால் ஏன் என்று காரணம் தெரியாது. ஒரு சமயம் பகவானின் தூரத்து உறவான சோமு என்பவரை அழைத்து வந்தனர். அவர் ஒரு மன நோயாளி. அவர் என்ன செய்தாலும் பகவான் உறவினர் என்பதால் அவரை யாரும் ஒன்றும் சொல்வதில்லை. இதனால் அவருடைய அட்டகாசம் அளவுக்கு மிஞ்சி போயிற்று. ஒருநாள் நானும் என்னுடைய சித்தி பெண் சாரதாவும் தனியாக இருக்கும்போது சோமு எங்கள் வீட்டிற்குள் புகுந்து லட்சுமி, சரஸ்வதி என்றெல்லாம் கூறி எங்களை நமஸ்கரித்தார். நாங்கள் பயந்து விட்டோம். மற்றொரு நாள் இரவு என்னுடைய கணவர் ஜுரத்தில் படுத்திருக்கும்போது சோமு அங்கு வருவதை கண்டு கதவைச் சாத்தினார். அப்பொழுது திடீரென்று என் கணவருக்கு நெஞ்சுவலி வந்துவிட்டது. இதைப்பற்றி பகவானிடம் யாரோ கூற பகவான் ரெண்டு போடுவதற்கென்ன? என்று கூற, தைரியமடைந்த சிலர் சோமுவை நையப் புடைத்து விட்டார்கள். இதன்பின் சோமு யாருக்கும் தொந்தரவு கொடுக்கவில்லை.

இதனால்தான் பகவான் இவர்மீது கடுமையாக நடந்து கொண்டாரோ?

பகவானுடைய நயனங்களை எப்படி வர்ணித்தாலும் வார்த்தைகள் போதாது. கவிகளுக்கே இயலாத காரியம் அது. பகவானைப் பார்த்தவர்கள் யாரும் அதைக் குறிப்பிடாமல் இருந்ததில்லை. ஒருநாள் நான் ஹாலில் ஒரு ஜன்னலின் பக்கத்தில் அமர்ந்திருந்தபோது பகவான் என்னையே உற்றுப் பார்த்தார். நானும் அவருடைய பார்வையில் லயித்தேன். அந்தக் கண்கள் அறை முழுவதும் வியாபித்து நின்றன. என் உணர்விலும் நின்றது. எனக்கு வேறெந்த நினைவும் இல்லை. எத்தனை நேரம் அவரை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று தெரியவில்லை. அப்போது எனக்கு வயது 14. பிறகுதான் இது பகவான் எனக்கு அளித்த நயன தீட்சை என்று எனக்குத் தெரிந்தது. பகவானுடைய பார்வையின் வலிமையை நான் அப்போது அறியவில்லை. பகவான் என்னை உற்று நோக்கிய சந்தோஷம் மட்டுமே அப்போது இருந்தது. பகவானுடைய அருட்பார்வை வீணாகாது. அன்று விதைத்தது என்றாவது பயன்தரும் இதில் ஐயமில்லை. ஆனால் என்று? அதுதான் தெரியவில்லை.

ஒருசமயம் என் புகுந்த வீட்டில் ஏற்பட்ட தகராறால் என் மனம் மிகவும் துக்கத்தில் இருந்தது. அப்போது என் சித்தப்பா என்னை அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை வந்தார். இங்கும் என் மன வேதனை குறைந்தபாடில்லை. மீண்டும் சேலம் திரும்பும்போது பகவானிடம் விடைபெற அங்குச் சென்றேன். பகவான் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். நான் இருண்ட மனத்துடன் அவரை நமஸ்கரித்தேன். தலை தூக்கியதும், பகவானின் பாத கமலங்கள் இரண்டும் என் கண்ணெதிரே இருந்த சிறு முக்காலியின் மேல் இருந்தன. என்னை அறியாமலேயே

அத்திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டேன். ஒரு விநாடியில் பதறிப்போய் எழுந்து வெளியே வந்து விட்டேன்.

அந்த நிமிடம் முதல் எனக்குள் ஒரு பேரானந்தம் பொங்கி எழுந்தது. மன வேதனை போன இடம் தெரியவில்லை. ஊர் திரும்பும் வழியில் என்னுடன் வந்தவர்கள் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் வந்தார்கள். ஆனால் என் மனமோ, பகவானை நினைத்து பொங்கி எழும் ஆனந்தக் கடலில் லயித்து விட்டது. அதற்குப் பிறகு புகுந்த வீட்டில் என்ன நடந்தாலும் அது என்னை பாதிக்கவில்லை. இந்தச் சுகானுபவம் சில காலம் இருந்து பிறகு குறைந்து விட்டது. அதற்குள் வீட்டின் நிலைமையும் சாதகமாக மாறிவிட்டது. இதை நினைத்துப் பார்க்கும்போது பகவான் நயன தீட்சைக்குப் பிறகு ஸ்பரிச தீட்சை அளித்தார் என்று தோன்றுகின்றது. காரணமின்றி அந்த மாதிரி இரண்டு பாதங்களையும் சேர்த்து முக்காலியின்மேல் பகவான் வைத்துப் பார்த்தில்லை. பகவான் தந்தாலின்றி அந்தப் பாதங்களை தொடும் தைரியம் எனக்கு வருமா? மேலும் அந்த ஆனந்த நிலை என் மனத்தில் எப்படி, ஏன் உருவாயிற்று ? என் வாழ்நாளில் அதற்கு முன்போ, பின்போ இதுபோல் அனுபவம் ஏற்பட்டதில்லை.

ஒரு முறை, ஜயந்தி நாளாக இருக்கலாம், நல்ல கூட்டம். பெரிய பந்தலில் பகவான் சோபாவைச் சுற்றி மூங்கில் வேலி அமைக்கப் பட்டிருந்தது. எல்லோரும் அமைதியாகக் கண்ணை மூடித் தியானத்தில் இருந்தார்கள். ஆஸ்போனுடைய இரண்டு வயது மகன் ஆடம் எப்படியோ அந்தத் தடுப்பிற்குள் நுழைந்து பகவானிடம் போய் விட்டான். பகவான் அவனைப் புன்சிரிப்புடன் வரவேற்றார். சிறிது நேரம் கழித்து, வெளியே வரத்

தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். எல்லோருக்கும் பின்னால் உட்கார்ந்திருந்த நான் முன்னால் சென்று அவனைத் தூக்கி முத்தமிட்டு வெளியே விட்டேன். இதற்கு முன்னால் என்னுடைய சித்தப்பா ராஜகோபாலய்யர் மனத்தில், சரோஜா பகவான் முன் பிள்ளை வேண்டி திருப்புகழ் பாடியிருக்கிறாள். இப்போது அவள் ஆடமைத் (ஆஸ்போனின் மகன்) தூக்கினால் பிள்ளை பிறக்கும் என்று எண்ணினார். அதேபோல் நடந்ததைப் பார்த்து, இவளுக்குப் பிள்ளை பிறக்கும் பாருங்கள் என்று அடித்துக் கூறினார். அவர் கூறியபடியே நடந்தது.

தனக்குக் குழந்தை வரம் கேட்டு பகவான் சந்நிதியில் தண்டையணி வெண்டையும் கிண்கிணி சதங்கையும் என்ற திருப்புகழைப் பாடி பகவான் அருளால் சிசுவை வயிற்றில் சுமந்தபோது பகவான் அமர்ந்திருக்கும் ஹாலைப் பிரதட்சிணம் செய்வேன். பிறகு பிரசவத்திற்காகத் திருவண்ணாமலையில் போதிய வசதி இல்லாததால் வேலூர் சென்று தங்கியிருந்தேன். பிரசவத்தின்போது சிக்கல் ஏற்பட்டது. வேலூரில் இருந்து ஆச்ரமத்திற்குத் தந்தி கொடுக்கப்பட்டது. அந்தத் தந்தி பகவான் பார்வைக்கு மதியம் வந்ததும், நம்ம சரோஜாவிற்கா என்று ஆதுரத்துடன் கேட்டார். பகவான் கருணையால், யாதொரு சிரமமும் இன்றி ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு வேறு பெயர் வைத்திருந்தாலும் ரமணன் என்றே அழைப்பார்கள்.

பகவானைப் போலவே குழந்தைகளுக்கும் அகங்காரம் என்பது கிஞ்சித்தும் கிடையாது. எனவே குழந்தைகளைப் பார்க்கும் போது பகவான் முகமலர்ந்து சிரித்து, குழந்தையோடு விளையாடுவார். ஒருதரம் என் குழந்தை ரமணனைக் கையில் தூக்கிக் கொண்டு பகவான் மலையில் இருந்து திரும்பும் வழியில் நின்று கொண்டிருந்தேன்.

அவனுக்கு அப்போது மொட்டையடித்திருந்தோம். பகவானும் அன்று பௌர்ணமி யாதலால் சவரம் செய்திருந்தார். பகவான் குழந்தையைப் பார்த்ததும் கீழே குனிந்தார். குழந்தை சிரித்து பகவான் தலையைப் பார்த்து தன் தலையை நீட்டினான். பகவானும் சிரித்துக் கொண்டே தன் தலையால் குழந்தையின் தலையை மெல்ல முட்டினார். என்னுடைய பிள்ளைக்கு சந்தோஷம் தாளவில்லை. அவன் மீண்டும் தன் தலையை பகவான் தலையுடன் முட்டி விளையாடினான். இவ்வாறு இருவரும் விளையாடுவதைக் கண்டு, பார்த்தவர்கள் எல்லாம் மனமகிழ்ந்து மெய் சிலிர்த்தனர். என் குழந்தை தவழ முடியாமல் தாவித்தாவிப் போவான். இதைக் கவனித்த பகவான் அவனைப் போலவே செய்து காண்பித்தார். அறிவாளிகளும் சான்றோர்களும் நிறைந்த சபையில் வேத ரகஸ்யங்களை விளக்கும் பகவான் அதே கவனத்துடன் ஒரு சிறு குழந்தையின் தவழ்தலை உற்சாகமாக வர்ணிப்பதைக் கேட்க அற்புதமாக இருந்தது.

என் 5 வயது மகன் ரமணன், பகவான் எதிரில் அவரைப் போலவே காலை மடித்து உட்கார்ந்து பகவானே, நானும் மலையில் தபஸ் பண்ணினேன் என்றார். அதற்கு பகவான் ஆச்சரியப்படுவது போல் மூக்கின் மேல் விரல் வைத்து, அடடே, இவன் தபஸ் செய்தானாமே! என்று புன்னகையுடன் கூறினார். இவனுக்கு ஒரே பெருமை. தான் பள்ளியில் படித்த பாடலை பகவான் முன் உரக்கக்கூற பகவானும் மிகவும் கவனத்துடன் கேட்டு ரசித்தார்.

ஒரு சமயம் என்னுடைய மகனுக்கு அம்மை கண்டிருந்தது. நான் பயந்துபோய் பகவானுக்குத் தந்தி கொடுக்கச் சொன்னேன். ஆச்ரமம் எதற்காகவோ அனுப்பிய பிரசாதம் அந்தத் தபாலில் வந்தது. உடனே பகவான் எனக்கு அபயம் அளித்தமாதிரி இருந்தது. இம்மாதிரி

*அநேக பக்தர்களுக்கு அனுபவமுண்டு. ஆனால் பகவான் தான் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதாகக் காண்பித்ததேயில்லை. பயந்து பகவானிடம் சரணடைந்து முறையிடும்போது பிரசாதமோ அல்லது ஏதாவது ஒரு நல்ல தகவலோ ஆச்ரமத்திலிருந்து கிடைத்து விடும்.*

*என்னுடைய சித்தப்பா ராஜகோபாலய்யர் பகவானுடைய மேனியிலிருந்து எப்போதும் சுகந்த வாசனை வீசிக் கொண்டிருக்கும் என்று கூறுவார். அது விபூதி, சந்தனம், கற்பூரம், பூ இவைகளில் எதிலும் அடங்காத ஒரு அலாதியான வாசனை. எப்படி அதை வர்ணிப்பது? நமக்குத் தெரிந்த வாசனைகளைப் போல் இல்லை. அது இயற்கையாக, பகவானுக்கு மட்டுமே உரித்தானது.*

*பகவான் மகாநிர்வாணத்திற்குப் பிறகு தமது பக்தர்களைத் திருத்தி ஆட்கொள்கிறார் என்பதற்கு என் சித்தப்பா ராஜகோபாலய்யர் ஒரு சிறந்த உதாரணம். அவர் வாக்குச் சாதுர்யம் மிக்கவர். தனது பேச்சு சாமர்த்தியத்திலேயே எலியைப் புலியாக்கிக் காட்டுவார். இத் திறமையைக் கொண்டு சிலருக்கு உதவவும் செய்வார். சிலரை சீண்டவும் சீண்டுவார். இதனால் சில சமயம் சிக்கல் ஏற்படுவதுண்டு. அதனால் அவரை மௌனமாக இருக்கும்படி கேட்டுக் கொள்வார்கள். அதற்கு அவர் நான் யார்சொன்னாலும்கேட்கமாட்டேன்.என்னிஷ்டப்படிதான் நடப்பேன். என் பகவான் சொன்னால்தான் வாயை மூடுவேன் என்று வாதிடுவார்.*

*ஒருநாள் என் சித்தப்பாவின் கனவில் பகவான் தோன்றி தன் கைத்தடியால் அவரைத் தட்டி, ஏய் வாயை மூடு என்று கூறினார். மறுநாளிலிருந்து என் சித்தப்பா எதிலும் பற்றற்று மௌனியாகி சுமார் இரண்டாண்டுகள்வரை பகவத் தியானத்திலிருந்து 1980ஆம் ஆண்டு பகவான் திருவடியை அடைந்தார்.*

# ரமணானுபவம்

## நரசிம்மய்யர்

திருவண்ணாமலையில் பிறந்து சிறு வயதிலேயே. பகவானுடைய தரிசனம் கிடைக்கப் பெற்று திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள ஊர்களில் ஆசிரியர் பணி செய்து அவ்வப்போது பகவானைத் தரிசனம் செய்து ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு ஆச்ரமத்திற்கருகிலேயே தங்கி ஆச்ரமப் பாடசாலை மாணவர்களுக்குத் தமிழ், ஆங்கிலம், கணக்கு இவைகளைப் போதித்து. தற்சமயம் அமைதியாகக் காலம் கழித்து வரும். பாக்கியம் பெற்றவர் நரசிம்மய்யர் ஆவார். அவரது ரமண நினைவுகளைக் கீழே காண்போம்.

1928ஆம் வருடத்தில் ஒரு விடுமுறை நாளில் திரு. கோபால்ராவ் ஆச்ரமத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அவருடன் வந்து முதன்முதலில் பகவானைத் தரிசித்து நமஸ்கரித்தேன். அப்போது எனக்கு வயது 14. இதுதான் எனது முதல் பகவான் தரிசனம். பிறகு ஆச்ரமத்திற்கு நான் அடிக்கடி வரத் துவங்கினேன். கோபால்ராவ்தான் அப்போது ஆச்ரமத்தின் காரியதரிசி. 1924ஆம் வருடம் கள்வர்கள் ஆச்ரமத்திற்கு வந்து சென்ற பிறகு ஆச்ரமத்திலிருந்த மளிகைச் சாமான்கள் அனைத்தும் அண்ணாமலையார் கோயிலில் கிழக்கு கோபுரத்தின் அருகேயிருந்த மூல மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. கோபால்ராவ் மூல மண்டபத்திலிருந்து அன்றாடம் ஆச்ரமத்திற்கு வேண்டிய அரிசி, பருப்பு, தயிர் மற்றும் மளிகைச் சாமான்களை ஒரு பெட்டியில் எடுத்துவைத்து வீரன் என்ற நபர்மூலம் கொடுத்தனுப்புவார். எல்லாவற்றையும் சேர்த்துச் சமைப்பார்கள். மதிய உணவு

மீதியிருந்தால் இரவுக்கு அதை வைத்துக் கொள்வார்கள். அக்காலத்தில் பொதுவாகச் சின்னஸ்வாமிகள்தான் சமையல் செய்வார். பகவான் அடிக்கடி வந்து சமையலைச் சரி பார்ப்பார். அவ்வப்போது மூல மண்டபத்திற்குச் சென்று நானும் உதவுவேன். மூல மண்டபத்தில் கோபால்ராவுடன் அச்சமயத்தில் முருகனார், ஈச்வர சுவாமிகள், ராமநாத பிரம்மச்சாரி, ஜடை சுப்ரமணிய அய்யர் போன்ற ரமண பக்தர்கள் தங்கி பிக்ஷை எடுத்து வாழ்ந்து வந்தனர். அச்சமயத்தில் அம்மா கோயில் மேல் ஒரு சிறு கூரை இருக்கும். சமையல் கட்டு கூரை வேய்ந்ததாக இருந்தது. பகவான் ஹால் (பழைய ஹால்) அப்போது தான் கட்டி முடிக்கப்பட்டு சுண்ணாம்பு அடிக்கப் பட்டிருந்தது (1928ஆம் வருடம்). பகவானுடன் குஞ்சு சுவாமி, சோம சுந்தர சுவாமி, ராமகிருஷ்ண சுவாமி, ராமசுவாமிப் பிள்ளை போன்றோர் இருந்தனர். அக்காலத்தில் ஆச்ரமத்தில் வேலையாட்கள் கிடையாது. அம்மா சந்நிதியை மெழுகுவது, பாத்திரங்கள் தேய்ப்பது, சமையலுக்கு வேண்டியதை அரைப்பது எதுவானாலும் யாவரும் பங்கிட்டுக் கொண்டு விருப்பமுடன் செய்து வந்தோம். பகவானும் இவ்வேலைகளில் உதவி செய்வார். அப்போது கூட்டம் அதிகமில்லை. எனவே அன்பர்கள் பகவான் சந்நிதியில் ஒன்றிவிடுவார்கள். சட்டதிட்டங்கள் ஏதும் இல்லாத காலம் அது. எனக்கு பகவானுடனும் முருகனாருடனும் அருகில் அமர்ந்து மாவு அரைக்கும் பாக்கியம் கிடைத்ததை இன்று நினைத்தாலும் கண்களில் நீர் ததும்புகிறது. மேலும் சின்னஸ்வாமிகள் பள்ளி விடுமுறை நாட்களில் என்னை வரச் சொல்லித் தாயார் சமாதிக்கு பூஜை செய்யும்படி பணிப்பார். அந்தப் பாக்கியமும் எனக்குக் கிட்டியது.

1930ஆம் வருடத்தில் கோபால்ராவ் காரியதரிசி பதவியில் இருந்து திடீரென்று விலகுவதாக அறிவித்தார்.

முதலில் இந்தப் பொறுப்பை வாசுதேவ சாஸ்திரியிடமிருந்து பெற்றதாகவும் எனவே மீண்டும் அவரே பார்த்துக் கொள்ளட்டும் என்றும் கூறினார். ஆனால் வாசுதேவ சாஸ்திரியோ தாம் முனிசிபல் பள்ளியில் (சம்ஸ்கிருத) ஆசிரியராக வேலை செய்வதால் தன்னால் இயலாது என்று மறுத்து விட்டார். எனவே இழுபறி தொடர்ந்தது. இதனிடையில் பகவான் ஜயந்தியும் வந்தது.

ஆச்ரமத்தில் இருந்த பக்தர்கள் அனைவரும் ஜயந்தியை நல்ல முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்தார்கள். ராமகிருஷ்ண சுவாமியும், ரங்காராவும் சின்னஸ்வாமியை காரியதரிசியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். அவரோ, நான் சந்நியாசி; எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்துள்ளேன். எனக்கு வேண்டாம் என்று மறுத்தார். ஆனாலும் அவரை வற்புறுத்தி பகவானுக்கு முன்னால் அழைத்துச் சென்று ஒப்புக் கொள்ள வைத்தனர். பகவானும் தலையசைத்து அதை ஆமோதித்தார்.

இப்படி இருந்தும் கோபால்ராவ் அன்பர்களின் விலாசம் எழுதிய புத்தகத்தைத் தர மறுத்துவிட்டார். எனவே தெரிந்த விலாசங்களுக்கு மட்டுமே ஜயந்தி பத்திரிகைகள் அனுப்பப்பட்டன. ஜயந்திக்கு இரண்டு நாட்களே இருந்தன. ஆனால் ஜயந்திக்கு வேண்டிய சாமான்கள் ஒன்றும் ஆச்ரமத்தில் இல்லை. ஒன்றும் புரியாமல் சின்னஸ்வாமிகள் கவலையடைந்தார். நான் அச்சமயம் ஊசாம்பாடியில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தேன். பகவான்மீது பாரத்தைப் போட்டு அவ்வூரில் இருந்த சில பணக்கார ரெட்டியார்களை அணுகி ஜயந்திக்கு உதவும்படி வேண்டினேன். நான் எதிர்பார்த்ததைவிட அவர்கள் தாராளமாக ஒரு வண்டி நிறைய அரிசி, பருப்பு, வாழைக்காய்த் தார்கள், வாழைஇலைக் கட்டுகள்

முதலியவற்றை அன்றே அனுப்பி வைத்தனர். ஜயந்தியும் நன்றாக நடந்தேறியது.

1930லிருந்து தொடர்ந்து வெள்ளிக் கிழமை மாலை ஆச்ரமத்திற்கு வந்து திங்கட்கிழமை காலைதான் ஆச்ரமத்தை விட்டுச் செல்வேன். பள்ளி விடுமுறை நாட்களை ஆச்ரமத்திலேயே கழிப்பேன்.

1930ஆம் வருடத்தில் அருணாசலம் பிரம்மச்சாரி என்பவர் ஆச்ரமத்தில் வசித்து வந்தார். அவர் சமையல் முதல் எல்லா வேலைகளும் செய்து வந்தார். மூட்டை மூட்டையாக சமைத்து அன்னதானம் செய்ய வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவதுண்டு. அவர் ஒருநாள் ஆச்ரம வாயிலருகே உள்ள இலுப்பை மரத்தின்மேல் ஏறி ஒரு வெள்ளைக் கொடியைக் கட்டி விட்டு பகவானிடம் வந்து, அன்னக் கொடி ஏற்றிவிட்டேன் பகவான் என்றார். அப்போது பகவான் ஊம், சரி சரி என்று தலையசைத்தார். அன்றைய காலத்தில் ஆச்ரமத்தில் கைக்கும் வாய்க்கும் எட்டாத நிலை. எனினும் பிற்காலத்தில் அனுதினமும் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் அளிக்கும் வண்ணம் ஆச்ரமம் வளர்ந்து விட்டது.

19311932 ஆம் வருடங்களில் நரசிம்மாச்சாரி என்ற வக்கீல் ஒவ்வொரு ஞாயிறும் சென்னையில் இருந்து வந்து முருகனாரிடம் பகவானுடைய நூல்களுக்கு விளக்கம் கேட்டுச் செல்வார். இவர்தான் ஆச்ரமத்தில் காலை உப்புமா, காபி கிடைக்க ஏற்பாடு செய்தவர். அதற்குமுன் காலையில் டிபன் என்று ஏதும் இல்லை. கஞ்சி இருந்தால் உண்டு. அவர் பகவான் ஜயந்தி மகா பூஜை அன்று பகவான் அன்பர்களுக்கு புதிய வஸ்திரம் வாங்கி அளிப்பதுண்டு.

1934ஆம் வருடம் சமுத்திர ஏரியில் இருந்து திருவண்ணாமலை நகரத்திற்கு குடிதண்ணீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டது. அதை திரு. தாத்தாச்சாரியார்

என்ற இன்ஜினியர் மேற்பார்வையிட்டு வந்தார். அவர் சிறந்த ரமண பக்தரும் ஆவார். அவரும் அப்போது திருவண்ணாமலை ஆர். டி. ஓ (வட்டாட்சியர்) வாக இருந்த ராஜபந்துலுவும் சேர்ந்து ஆச்ரம வாயிலருகே உள்ள இலுப்பை மரத்தடியில் ஒரு குழாய் இணைப்பைத் தந்தனர். இதற்குத் திருவண்ணாமலை நகராட்சி எதிர்ப்பு தெரிவித்ததால் தாத்தாச்சாரியார் சென்னை சென்று அனுமதி பெற்றுத் திரும்பினார். நகராட்சியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இவ்வன்பரே பிற்காலத்தில் ஆச்ரமக் கிணற்றுக்கருகே உள்ள ஸ்டோர் ரூமையும் அதற்குமேல் உள்ள தண்ணீர்த் தொட்டியையும் கட்டி உபயம் செய்தவர்.

1942ஆம் வருடம் பகவானுடைய தோள் பட்டை எலும்பு முறிந்தபோது நான் அப்போது வேலை பார்த்த ஊரில் இருந்த எலும்பு முறிவு வைத்தியரைத் தேடி ராமகிருஷ்ண சுவாமியும், கோவிந்த சுவாமியும் வந்தனர். தகவல் அறிந்து உடனே போய் வைத்தியரை அழைத்து வந்தோம். வைத்தியர் கட்டுப் போட்டு விட்டுச் சென்றார். வைத்தியர் கூறியபடி நான் மூன்று நாட்கள் தங்கி பகவானுக்குப் பச்சிலைக் கஷாயம் தந்தேன். அப்போது பகவான் வேடிக்கையாக, இவர் ஒரு பெரிய டாக்டர் என்று மற்றவர்களிடம் தமாஷாகக் கூறினார்.

ராமநாத பிரம்மச்சாரி ராட்டினத்தில் நூல் நூற்று தேசூருக்கு அனுப்பி மஸ்தான் சுவாமி மூலம் நெய்த புதிய கதர் கௌபீனத்தையும் துண்டையும் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் கொடுப்பார்.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பகவானது தீவிர பக்தர். அவர் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்வார். ஒவ்வொரு சத்தியாகிரகத்திற்குச் செல்லுமுன் ஆச்ரமத்தில் சில நாட்கள் தங்கிச் செல்வார். இவ்வாறு சுதேசி இயக்கம்

ஆச்ரமத்தில் வந்தது. காபி, பால், பாயசத்திற்கு வெள்ளைச் சர்க்கரைக்குப் பதிலாக வெல்லப்பாகு உபயோகிக்கப் பட்டது. ராமநாத பிரம்மச்சாரி வேதாரண்யம் சென்று அங்கிருந்து உப்பைக் கொண்டு வந்து பகவானிடம் கொடுத்தார்.

ஓ. பி. ராமசாமி ரெட்டியார் சுதந்திர இந்தியாவின் சென்னை மாகாணத்தின் முதல்மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 14847 அன்று மாலை பகவானிடம் ஆசி பெற்று 15847 அன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று கொடி ஏற்றியதும் அன்றே மீண்டும் ஆச்ரமத்திற்குத் திரும்பி விட்டார். இவரே பகவானுடைய மகாநிர்வாணச் சமயத்தில் கலவரம் ஏற்படாமல் உதவி செய்தவர்.

பெருமாள் சுவாமி என்ற அன்பர் ஆச்ரமத்திற்கு எதிராக ஒரு வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில் ஆச்ரமத்திற்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும் பின்நாளில் ஏதும் பிரச்சினை வராமல் இருக்க டி.பி. ஆரும், துரைசாமி ஐயரும் கலந்தாலோசித்து உயில் எ

த விரும்பினர். அப்போது சேலத்தில் இருந்த ஓய்வு பெற்ற நீதிபதி சுந்தரம் செட்டியார் உயிலின் மாதிரிப் படிவத்தை எ

தி அதை ஒருநாள் ஆச்ரமத்திற்கு எடுத்து வந்து தற்போது சமையலறைச் சாமான்கள் இருக்கும் அறைக்குப் பக்கத்தில் இருக்கும் கொட்டகையில், பகவான் முன் ஒவ்வொரு ஷரத்தையும் படிக்க, பகவான் அதை ஆமோதிக்க உதவிப் பதிவாளர் அதை முறையாகப் பதிவு செய்தார்.

பெருமாள் சுவாமி தான் தொடுத்த வழக்கின்போது பகவானை கோர்ட் ஏற வைக்க முயற்சி செய்தார். இச்சமயத்தில்தான் பகவானைத் தரிசிக்க வந்த கிராண்ட் டஃப் சென்னை மாகாண கவர்னரிடம் பகவானைப் பற்றிக்

கூறி அவரைக் கோர்ட்டுக்கு அழைக்கக் கூடாது, கோர்ட் தான் அங்குச் செல்ல வேண்டும் என்று கூறினார். அதன்படியே நீதிமன்றமும் ஆச்ரமத்திற்கு வந்து விசாரணை நடத்தியது.

தற்போது ஆச்ரம ஆஸ்பத்திரி இருக்கும் இடத்தில் கூரைக் கொட்டகையில் ஆச்ரம வேதபாடசாலை துவங்கப்பட்டது. அதற்கு முதல் ஆசிரியராக கிருஷ்ண கனபாடிகள் பணியாற்றினார். இவர் நெடுங்காலம் ஆச்ரம பாடசாலை ஆசிரியராக வேலை பார்த்து வந்தார்.

1938ஆம் வருடம் நிரந்தரமாகக் கட்டிடம் ஒன்று கட்டப் பட்டது. இதற்குஅருகில் கோசாலையும்அமைக்கப்பட்டது. மேற்கூறிய சேலம் ஜஸ்டிஸ் சுந்தரம் செட்டியார் அவர்கள் உபயத்தால் கால்நடை வைத்தியர் அனந்தநாராயணராவ் திட்டப்படி கோசாலை கட்டப்பட்டது.

ஆச்ரமத்தில் முதன் முதலாக புத்தகசாலை ஆச்ரமத்தின் சார்பாக அண்ணாமலையார் கோயில் மூல மண்டபத்தில் ரமணீயவாணி புத்தகாலயம் என்ற பெயரில் இயங்கி வந்தது. சின்னஸ்வாமிகள் ஆச்ரம காரியதரிசியாகப் பொறுப்பேற்ற பின் ஆச்ரமத்திலேயே அம்மா சமாதிக்கருகில் இருந்த தாழ்வாரத் திண்ணையில் அமைக்கப்பெற்றுது. அதற்கு சோமசுந்தர சுவாமிகள் பொறுப்பேற்று ஆச்ரம புத்தகங்களை விற்பனை செய்து வந்தார். ஆச்ரமத்திற்கென்று தனியாக ஒரு அலுவலக அறை கட்டப்பட்டபோது புத்தகசாலைக்கும் சேர்த்து ஒரு அறை கட்டப்பட்டது. புத்தகசாலை மூலம் ஆச்ரமத்திற்கு நிரந்தர வருவாய் கிடைப்பதற்கு வழி வகுக்கப்பட்டது.

ஆச்ரமத்து காரியதரிசியாக இருந்து பிறகு சர்வாதிகாரி என்று அழைக்கப்பெற்ற சின்னஸ்வாமிகள் அம்மாவிற்கு ஒரு கற்கோயில் எழுப்ப வேண்டுமென்று நினைத்து மகிழவன ஸ்தபதி என்பவருடன் ஆலோசித்து ஒரு

*வரைபடம் தயாரித்தார். ஸ்தபதியோ அதைக் கட்ட ஒரு லட்சம் ரூபாய் ஆகுமென்றும் அதை முதலில் வங்கிக் கணக்கில் போட்டு விட்டுத்தான் வேலையைத் துவக்க முடியும் என்றும் கூறிவிட்டார். சின்னஸ்வாமிகள் வேலைக்குக் குந்தகம் ஏற்படாமல் அவ்வப்போது பணம் தருவதாகக் உறுதி கூறியபோதும் ஸ்தபதி மறுத்து விட்டார். இடையில் வேலை நின்று விட்டால் தனக்கு இழுக்கு வரும் என்ற பயமே ஸ்தபதியை இவ்வாறு மறுக்க வைத்தது. அவருக்கு கிட்டாத பாக்கியம் அவரது குமாரர் வைத்தியநாத ஸ்தபதிக்குக் கிட்டியது. 1939ஆம் வருடம் செப்டம்பர் இரண்டாம் தேதி அம்மா கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு எந்தத் தடையுமின்றி 1949ஆம் வருடம் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.*

*இரும்பு, சிமெண்ட் போன்ற கட்டுமானப் பொருட்கள் இரண்டாம் உலகப் போர் காலத்தில் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது. எனினும் பகவானுடைய அருளும் சின்னஸ்வாமிகளின் விடா முயற்சியும் பக்தியுமே அம்மா கோயிலின் கட்டுமானப் பணி எந்தத் தடையுமின்றி நடந்தேற உதவியது.*

*இதற்கான பாலாலயம் தற்போதைய பகவான் சமாதி அமைந்திருக்கும் இடத்தில் ஒன்பது ஆண்டுகள் இருந்தது. அம்மா கோயிலுக்குள் இருக்கும் யோகாம்பிகை விக்கிரகத்தை ஸ்தபதி பஞ்சலோகத்தினால் ஆச்ரமத்திலேயே செய்தார். இதைச் செய்யும்போது பஞ்ச லோகங்கள் முறையாகக் கலக்கவில்லை. குறிக்கப்பட்ட நல்ல நேரமும் கடந்து கொண்டிருந்தது. அப்போது ஒன்றும் புரியாமல் ஸ்தபதி பகவானிடம் முறையிட, பகவான் வந்து பார்த்து, ஒரு சவரன் தங்க நாணயத்தைக் கலவையில் போடுமாறு கூற கலப்பு உடனே ஏற்பட்டு அம்மன் முகம் ஜொலிக்கத் தொடங்கியது.*

*(அடுத்த இதழில் முடிவுறும்)*

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்
## நவராத்திரி விழா, ஸ்ரீ ரமணாச்ரமம்

ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நவராத்திரி உற்சவம் வழக்கம்போல் இவ்வாண்டும் வெகு விமரிசையாகவும் சிறப்புடனும் நடைபெற்றது. கடந்த செப்டம்பர் மாதம் 28-ஆம் தேதி அன்னை யோகாம்பிகையை கர்பகிருகத்திலிருந்து வெளிக்கொணர்ந்து நந்திக்கு முன்புறம் வைக்கப்பட்டது. அதன்பின் மறுநாள் முதல் அன்னைக்கு தினமும் அலங்காரங்கள் செய்தபின் வேத கோஷம் மற்றும் பக்திப் பாடலுடன் பூஜையும், ஆரத்தியும் நடைபெற்றன. பெருந்திரளான பக்தர்கள் தினமும் கலந்துகொண்டு அன்னையின் கருணைக் கடாக்ஷத்தைப் பெற்றனர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அக்டோபர் 6ஆம் தேதி அன்னை யோகாம்பிகையை ஊர்வலமாக எடுத்துச்சென்று கர்பகிருகத்தில் மீண்டும் வைக்கப்பட்டது. ஒவ்வொரு தினமும் ஸ்ரீ ரமணாச்ரம இணையதளத்தில் இந்திய நேரப்படி மாலை 6.45 மணி முதல் 7.30 மணி முதல் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

## முருகனார் ஆராதனை விழா
## 28-8-2011

தான் அடைந்த ரமண பேரானந்தத்தை முகவைக் கண்ண முருகனார் அவர்கள் வையம் உய்ய வேண்டி திருவாசகத்திற்கு நிகரான ரமண சந்நிதி முறையை அளித்தவர். இவர் எழுத்து வேறு, வாழ்க்கை வேறு என்று வாழாது எல்லாமும் ரமண மயமாகவே வாழ்ந்து காட்டியவர்.

இவரது ஆராதனை விழா இவ்வாண்டும் ஆச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டது. சென்னை மற்றும் பல இடங்களிலிருந்து அன்பர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். சென்னை ரமண அன்பர் சூளைமேடு திரு. ரமணன் மற்றும் அன்பர்கள் ரமண சந்நிதி முறை முற்றோதல் செய்தது குறிப்பிடத் தக்கது.

## ஸ்ரீ முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் அருளால் 28-8-2011 அன்று முகவைக்கண்ண முருகனாரின் ஆராதனை விழா இராமநாதபுரம், ஸ்ரீரமணகேந்திரம் ஸ்ரீ முருகனார் மந்திரத்தில் நடைபெற்றது. ஸ்ரீமத் சிவஸ்ரீ ஞானானந்த மகராஜ் முன்னிலையில் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. டாக்டர் கொண்டல்ராஜ் அவர்கள் சிறப்புரையாற்றினார். திரு. ஆர். வாசு அவர்கள் நிறையுரை ஆற்றினார். பாராயணம் செய்த பள்ளிச் சிறார்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.*

## விஞ்ஞான ரமணீய ஆச்ரமம், கொப்பம், பாலக்காடு (ஸ்ரீ ரமணாச்ரமம்)

*பாலக்காடு விஞ்ஞான ரமணீய ஆச்ரமத்தில் சுவாமி சுரேஷானந்தா துவக்கி வைத்து, கடந்த 1950ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஏழைகளுக்கு ஆடி மாதத்தில் அன்னதான யக்ஞம் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டும் 17-7-2011 முதல் 16-8-2011 வரை ஏழைகளுக்கான அன்னதான யக்ஞம் வெகு சிறப்பாக அன்பர்களின் பேராதரவுடன் நடைபெற்றது.*

## அருணை விஜய விழா
## மாடர்ன் சீனியர் உயர்நிலைப்பள்ளி, நங்கநல்லூர்

*ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுவது போல் இவ்வாண்டும் கடந்த 3-9-2011, சனிக்கிழமையன்று மாலை 4 மணியளவில் இப்பள்ளியின் பிரதான அரங்கத்தில் பகவான் ரமண அருணை விஜய விழா பள்ளி மாணவர்களின் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் நடைபெற்றது. திரு. லோகநாத ராஜா மற்றும் சுவாமி தியாகேசானந்த சரஸ்வதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். பகவானின் பேரருளினால் இப்பள்ளி மாணவர்கள் சில ஆண்டுகளாக அகில இந்திய அளவில் பள்ளி இறுதித் தேர்வுகளில் முதன்மை மாணவர்களாகத் தேர்வு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.*

## திண்டுக்கல்லில் ரமண சத்சங்கம்

*பகவான் ரமணர் 1890ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் தனது 11ஆம் வயதில் 1 வருடம் இங்குள்ள நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் படித்தது திண்டுக்கல்லுக்கு பெருமை.*

*அந்த நாளில் மாலை வேளைகளில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிபத்மகிரிமலையைச்சுற்றிஆடிப்பாடிவிளையாடியுள்ளார். திண்டுக்கல் கோவில் தெருவில் அவருடைய உறவினர் வீட்டில் வசிக்கும்போது அடிக்கடி உறக்கத்தில் ஆழ்ந்து விடுவார். சில சமயங்களில் அவரை நித்திரையில் இருந்து எழுப்ப உறவினர்கள் நையப் புடைத்தும் உள்ளனர்.*

*ஊமைத்துரைசுரங்கப்பாதையில்நண்பர்களுடன்விளையாடிய அனுபவத்தை பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பின்னாளில் திருவண்ணாமலை ஆசிரமத்தில் இருக்கும்போது திண்டுக்கல்லில் இருந்து வரும் அன்பர்களிடம் பகிர்ந்து கொள்வாராம்.*

*அத்தகைய திண்டுக்கல்லில் ரமண மகரிஷிகளை ஸ்கந்த ரமணராகப் பாவித்து, ஒவ்வொரு மாத கிருத்திகையன்றும் இங்குள்ள நாகல் நகரில் திரு. பழ. முத்தையா அவர்கள் மற்றும் அன்பர்கள் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் 1000 பேருக்கு அன்னதானமும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் திண்டுக்கல் மலையை வலம் வரும் அன்பர்களுக்கு அதன் பாதையில் அமைந்துள்ள ரமண மையத்தைச் சார்ந்த அன்பர்கள் திரு. பாலபாரதி மற்றும் திரு. வாசு அவர்கள் சத்சங்கம் நடத்தி அன்னதானம் செய்தும் வருகின்றனர்.*

## ரமண சத்சங்கம், ஒட்டன்சத்திரம்

*இச்சத்சங்கத்தில் ஒவ்வொரு வியாழன் மற்றும் பௌர்ணமியன்றும் பகவானது பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு*

*விஜயதசமியன்று பள்ளிச் சிறார்கள் அக்ஷரமணமாலை பாராயணம் செய்ய அவர்களுக்கு எழுதுபொருட்கள் பரிசாக அளிக்கப்பட்டது. எளிமையாக வாழும் ரமண அன்பர்கள் சேர்ந்து நடத்தும் இச்சத்சங்கத்தில் ஒரு சிறப்பு நிகழ்வு மிகவும் குறிப்பிடத்தக்கது. ஒட்டன்சத்திரத்தில் வாழும் ஒரு தொழிலாளி தனது கடுமையான உழைப்பிற்குப்பின் ஒவ்வொரு நாளும் மது அருந்தாது உறங்க முடியாதநிலையில் இருந்தார். ஒருமுறை இச்சத்சங்கத்தில் கலந்துகொண்டு பகவானின் திருவுருவப் படத்தைப் பிரசாதமாகப் பெற்று அதைத் தனது சட்டைப் பையில் வைத்து வீடு சென்றவர் அன்று மது அருந்தாமலேயே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். அன்றுமுதல் அவரிடமிருந்த குடிப்பழக்கம் அகன்று விட்டது. தனது குழந்தைகளின் காது குத்தும் விழா பத்திரிகையை இச்சத்சங்கத்தின் தலைவர் திரு. வடமலைக் கண்ணன் அவர்களிடம் கொடுத்தார். அப்பத்திரிகையைப் படித்த அன்பர் கண்ணன் அவர்களுக்கு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. பத்திரிகை 'ஸ்ரீ ரமண மகரிஷிகள் துணை' என்ற முகப்புடன் அமைந்திருந்ததைக் கண்டார். அதற்கு விளக்கமாக அத்தொழிலாளி பகவான்தான் இனி எனக்குக் குலதெய்வம் என்று தழுதழுத்த குரலில் குறிப்பிட்டது அங்கிருந்த அனைத்து உள்ளங்களையும் உருக்கியது.*

*பகவான் பண்டிதர்களுக்கு மட்டும் அல்லாது பாமரர்களுக்கும் உரியவர் என்பதை இது உறுதிப்படுத்துகின்றது அன்றோ!*

---

## *ரமணோதயம்*

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள்



*வேதாந்த சாத்திரங்கள் அனைத்தும் சம்ஸ்கிருத மொழியில் மட்டுமே உள்ளன என்ற கருத்து நிலவி வந்த காலத்தில், தமிழ் மொழியிலேயே உன்னதமான வேதாந்த நூல்கள் உள்ளன என்று எடுத்துக்காட்டி தமிழர் பலர் வேதாந்தப் பயிற்சியில் ஈடுபடச் செய்த பெருமை மிக்கவர் கோவிலூர் 12-வது மடாதிபதியான நாச்சியப்ப ஸ்வாமிகள். அச்சுத் தொழிலில் பெரும் திறமை பெற்றவர் நாச்சியப்பர். துறவு பூண்டு கோவிலூர் மடத்தின் தலைவரானார். காலப்போக்கில் மறைந்திருந்த, 'ஒழிவில் ஒடுக்கம்', 'மோகவதைப் பரணி', 'மகாராஜா துறவு' போன்ற பல்வேறு தமிழ் வேதாந்த நூல்களை வெளிக்கொணர்ந்து அழகிய முறையில் உரையுடன் பதிப்பித்து, அத்வைதக் கருத்துக்களைத் தமிழ்கூறும் நல்லுலகில் பரவச் செய்த பெருமை அருள்மிகு நாச்சியப்ப சுவாமிகளுக்கே உரித்தானதாம். மேலும் தமிழ் மொழியில் உள்ள வேதாந்த மூல நூல்களைப் பல்வேறு பதிப்புகள் வழியாகவும், கருத்தரங்குகள் சொற்பொழிவுகள் வாயிலாகவும் பரவச் செய்தவர் சுவாமிகள். ஹரித்துவாரம் முதல் அமெரிக்காவரை பல்வேறு இடங்களில் கோவிலூர் மடத்தின் கிளைகளை அமைத்தும், கலாக்ஷேத்ர அச்சகம் மூலம் அத்வைத வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பியும் அருந் தொண்டாற்றியவர். கடந்த அக்டோபர் 3ஆம் தேதி பரம்பொருளில் இரண்டற ஒன்றிய நாச்சியப்ப சுவாமிகளின் பெருமை அளவிடற்கரியதாகும். தமிழ் அத்வைத மரபுக்கு அவரது மறைவு ஒரு ஈடு செய்ய இயலாத இழப்பாகும். அவரது அத்வைத மரபைத் தொடர்வது ஒன்றே அவரை நினைவு கூறும் வழியாகும்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | | 24611397 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **கூடுவாஞ்சேரி** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **பெசன்ட் நகர், அடையார்** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **குரோம்பேட்டை** K.L. சங்கர் | .......... | 22233432 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **அண்ணாநகர்** U.V. பானு | .......... | 26287809 |
| **புதுச்சேரி** M.S. சந்திரசேகரன் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **பொள்ளாச்சி** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.